ஜநவிநோதிநி.

இல. 2, 3.] { பேப்ருவரிமீ மார்ச்சுமீ } 1879. [புஸ்த. X.

அமிர்தஸரஸ்ஸென்னும் புண்ணியநகரம்.

பாஞ்சாலதேசத்தில் லாகூர் பட்டணத்துக்குச் சுமார் முப்பத்திரண்டு மைல்தூரத்தில் ரவி விபாசை என்னும் இரண்டு நதிகளுக்கும் மத்தியில், சீக்கியர்களுக்குப் பிரதான பட்டணமாயும், அவர்களுடைய மதத்திற்குப் பிறப்பிடமாயும் அமிர்த்ஸர் அல்லது அமிர்தஸரஸ்ஸு என்று ஒரு பட்டணமிருக்கின்றது. மோக்ஷஐசுவரியத்தைத் தரும் கேணியென்று அர்த்தமுள்ள அமிர்தஸரஸ்ஸு என்கிற தடாகத்தினுலேதான் அப்பட்டணத்துக்கு அந்தப்பெயர் அமைந்தது. அந்தத் தடாகம் சீக்கியர்களுடைய குருக்களுள் நான்காவது குருவான ராமதாஸனென்பவன் சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன்னே வெட்டிப் பிரதிஷ்டை செய்வித்ததாம். அதனுல் அப்பட்டணத்துக்கு ராமதாஸபுரமென்றும் பெயர் வழங்குவதுண்டு. அதன்பிறகு அது சிறந்த புண்ணிய ஸ்தலமாகி அநேகர் அவ்விடத்துக்கு யாத்திரை செய்துவருகிருர்கள்.

இருநூறு வருஷங்களுக்குமுன் ஆப்கன்தேசத்துத் தலைவனுயிருந்த ஆமத்ஷா என்பவன் சிக்கு ஜாதியார் மேன்மேலும் விருத்தியடைவதைக்கண்டு அஞ்சிக் கோபத்தினுல் அவ்விடத்துக் கோவிலைக் குண்டுவைத்துச் சுட்டுவிட்டு அந்தத் தடாகத்தையும் பசுவின் ரத்தத்தினுல் அசுத்தப்படுத்தினுன். அவன் அவ்விடத்தை விட்டுப் போனபிறகு சீக்கியர்கள் மறுபடியும் அவைகளைச் சீர்ப்படுத்தியிருக்கிருர்கள். இப்போது அந்த அமிர்தஸரஸ்ஸு சுமார் 375 அடி சதுரமாய் மிகவும் தெளிவான ஜலம் நிரம்பப்பெற்றிருக்

கின்றது. அதில் எப்போதும் நாநாதேசத்து ஜனங்களும் வந்து ஸ்நாநம்செய்துகொண்டேயிருப்பார்கள். அந்தக் கேணியின் நடுவில் சிறந்த விஷ்ணுகோவில் ஒன்று இருக்கின்றது. அந்தக் கோவிலின் வெளிப்புறமெல்லாம் பொன் வெள்ளி முதலியவைகளாலும், உட்புறமெல்லாம் சிறந்த ரத்நங்களாலும் வெகு விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. சிக்கியர்களுடைய மதக் கோட்பாடுகளின்படியே அவ்விடத்து வியாபாரங்களெல்லாம் நடந்தேறி வருகின்றன. அந்தக் கோவிலின் அழகை இச்சஞ்சிகையுடன் வருகிறபடம் நன்றாய் விளக்குகின்றது. அமிர்தஸரஸ்ஸின் கரையில் சிறிய கட்டடமொன்று உண்டு. அதிலேயே உட்காந்திருந்து ராமதாஸனென்பவன் காலக்ஷேபஞ்செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

ஸர் ஐஸாக் நியூடன் கதை.

ஏறக்குறைய் இருநூறு வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தில் லிங்கன் ஷயர் என்கிற மாகாணத்தில் ஒரு பண்டிதர் இருந்தார். அவருடைய தோற்றம் சிறுபிராயத்திலேயே யாவரும் பார்த்து விரும்பத்தக்கதாக வெகு கம்பீரமாயிருந்தது. அவருக்கு தேகவலிமை அதிகமாய் இல்லையென்றாலும் புத்திவலிமை அதிகம். ஆயினும் அவர் பள்ளிக்கூடத்தில் மிகவும் சோம்பேறியாய்த் தனக்குச் சமவயதான பிள்ளைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவே இருந்தார். அவருக்கு ஐஸாக் நியூடன் என்று பெயர். அவர் பனிரண்டு வயதானபிறகு கிராந்தன் (Granthan) என்னுமிடத்திலுள்ள பெரிய பாடசாலையில் படிப்பிக்கப்பட்டார். அங்கே படிக்கிறகாலத்தில் அவர் ஒரு மருந்துக் கடைக்காரன்வீட்டில் குடியிருந்தார். அப்போது அவரை அறிந்தவர்கள் எல்லோரும், இவன் முழுமூடன்; இவனுக்கு ஒன்றும் தெரியாதென்று இகழ்ந்துபேசினார்கள். அவர் ஒருநாள்கூடப் பாடசாலையில் புத்தியுள்ளவன்தானென்று ஒருவராலும் புகழப்பட்டதில்லை. ஆதலால் கூடப்படித்த பிள்ளைகள்கூட அவரை இகழ்ந்துபேசி நிந்திக்கத் தலைப்பட்டார்கள்.

ஒருநாள் அவருக்கு மேலேயிருந்த மாணாக்கன் ஒருவன் அவரை நன்றாய் உதைத்தான். அவன் அப்படி உதைக்கவொட்டாமல் தன்னைக் காத்துக்கொள்ளத்தக்க வலிமை அவருக்கு இல்லை. அப்படி அவருக்கு வலிமை இல்லாமற்போனதே அவருக்

கும் உலகத்திற்கும் மிகுந்த நன்மையாயிற்று. இல்லாவிட்டால் தன்னை உதைத்தவனைத் தாமும் எதிரே உதைத்துவிட்டு அவர் அவ்வளவோடு திருப்தியடைந்திருப்பார்; யாவரும் அவருடைய ஆராய்ச்சித்திறத்தால் உண்டான நன்மையையெல்லாம் இழந்துபோய் இருப்பார்கள். தனக்கு அவ்விதமாய் அவமானம் செய்தவனைத் தான் தன் தேகவலிமையைக்கொண்டு ஒன்றும் செய்யக்கூடாமற் போகவே அவர், தன்னை அப்படி மானபங்கப்படுத்தின பிள்ளையைக்காட்டிலும் தான் படிப்பில் அதிகரித்து அவனுக்கு மேலே போய் அவன் கொழுப்பை அடக்கவேண்டுமென்று உறுதியாய்த் தீர்மானித்தார்.

பிறரைத் தான் அதிசயிக்கவேண்டுமென்று முயல்வது நியாயமானதுதான்; பிறரை மானபங்கப்படுத்திக் களிப்படைய வேண்டுமென்று நினைப்பது மிகவும் பிசகானது. பள்ளிக்கூடத்தில் தன்னை உதைத்த பிள்ளையைத் திருப்பி உதைக்கும்படியான வலிமை நியூடனுக்கு இருந்திருக்குமேயானால் அவருக்கும் அதேமாதிரியான எண்ணமே உண்டாயிருக்கும். மேலும் நியூடன் விசேஷமாய்க் கல்விகற்றுப் பாடசாலைப் பிள்ளைகளுக்கெல்லாம் தாமே தலைவராயிருந்தகாலத்தில் அவர் மற்றப் பிள்ளைகளையெல்லாம் மிகவும் பக்ஷமாகவே நடத்தினார் என்பதைக் கேட்க நமக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது!

பிறகு நியூடன் வெகு கருத்தாய்ப் படித்துச் சீக்கிரத்திலேயே அப்பாடசாலைப் பிள்ளைகளுக்கெல்லாம் தாமே தலைவரானார். அவ்வளவு பெருமை பெற்றும் தனக்குக் கீழிருந்த பிள்ளைகளுக்கு இகழ்ச்சியான செய்கையொன்றும் அவர் செய்யவில்லை. அப்பிள்ளைகளுக்கெல்லாம் களிப்புண்டாக்கத்தக்க காரியங்களையே செய்தார். தன் சாமர்த்தியத்திற்கு இசைந்தமட்டும் வெகு நன்றாய்க் காற்றாடிகள்செய்து அப்பிள்ளைகளுக்குக் கொடுத்தார்.

கடுதாசியினால் விளக்குக்கூடுசெய்து விளக்கேற்றி அதை நியூடன் பனிக்காலத்துக் காலைவேளைகளில் கையில் பிடித்துக்கொண்டு போவார். இராக்காலங்களில் அந்த விளக்குக்கூடுகளைக் காற்றாடிகளின் வாலிலேகட்டிப் பறக்கவிடுவார். அதைக்கண்ட மூடஜனங்கள் அநேகர் இதென்ன தூமகேதுநக்ஷத்திரம்போல் காணப்படுகிறதேயென்று பயந்தார்கள். அவர் விளையாடுகிற காலங்களில் மற்றப் பிள்ளைகள் விளையாடுவதுபோலச் சாதாரணமாய் விளையாடவில்லை. வாள், சம்மட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள் வாங்கி அவைகளைத் தகுந்தபடி கையாள வெகு சீக்கிரத்திலேயே கற்றுக்கொண்டார்; ஒரு மனிதன் உள்ளே உட்கார்ந்து அவன்தானே ஓட்டிக்கொள்ளும்படியாக ஒரு வண்டிபண்ணினார்; தண்ணீர் வீழ்ந்து அதனால் காலவளவு சரியாய் ஏற்படும்படியாகக் கடிகா

யந்திரமொன்று செய்தார்; வழியோரத்தில் சில வேலைக்காரர்கள் ஒரு வகைவிசித்திரமான காற்றுயந்திரம் செய்துகொண்டிருக்கக்கண்டு தாமும் அதேமாதிரி சிறிதாக ஒரு யந்திரஞ்செய்து அதைத் தான் குடியிருந்த வீட்டின்மேல் கட்டிவைத்தார்; அந்த யந்திரத்தை ஓட்டும்படியாக அதற்குள் ஒரு எலியைப் பிடித்துவிட்டு அதற்கு இரையாக மாவையும் போட்டுவந்தார்; அந்த எலிக்கு யந்திரம் ஓட்டியென்று பெயரிட்டார்.

அவர் இருந்த அறைச்சுவரில் எங்கேபார்த்தாலும் கணிதவிஷயங்களே எழுதப்பட்டிருக்கும். நமது கண்ணுக்குத் தோன்றுகிறபடி சூரியனுடைய கதியையும் நன்றாய்க் குறித்துக் காட்டினார். அங்கங்கே நடுவில் ஆணிகளைக்கொண்டு அரைமணி ஒரு மணிகளின் தூரத்தைக்கூடத் தெளிவாகக் குறித்தார்.

இங்கே நாம் குறித்துச் சொல்லவேண்டுவது ஒன்று உண்டு. கணக்கிட்டுப் பார்த்துச் செய்யவேண்டிய காரியங்கள் பலவும் கணிதசாஸ்திரத்தினாலேயே ஏற்படுகின்றன. ககோளமென்று சொல்லப்பட்ட இந்தப் பிரம்மாண்டத்திற்குச் சூரியனே மையமாம். இந்தப் பூமி சூரியனைச்சுற்றி ஒரு வருஷத்திற்கு ஒருதரம் ஓடுகின்றது. மேலும் அதேகாலத்தில் பூமி மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் இருபத்தினான்குமணி நேரத்துக்கொருதரம் தனக்குத்தானே உருள்கின்றது. சூரியன் ஓடுவதில்லை. ஆயின் சூரியன் ஓடுவதாக நமது கண்ணுக்குத் தோன்றுவது ஏனெனில், நாம் ரயில் வண்டியில் ஏறிப்போம்போது பக்கத்தில் இருக்கிற தந்திக்கம்பி மரம் செடி முதலியவெல்லாம் நமக்கு எதிர்முகமாய் ஓடுவதாய்த் தோன்றுவதுபோல, நாம் வாசமாயிருக்கிற பூமி மேற்கிலிருந்து கிழக்கே ஓடுவதனால் சூரியன் நக்ஷத்திரம் முதலியவெல்லாம் கிழக்கிலிருந்து மேற்கே ஓடுவதாய்த் தோன்றுகின்றன.

நியூடனுக்குப் பதினைந்து வயதானபோது அவருடைய தாயார் தன் வீட்டுவேலைகளுக்கு உதவியாய் அவரைப் பாடசாலைக்குப் போகவொட்டாமல் வீட்டிலேயே வைத்துக்கொண்டாள். பயிர்த்தொழில் முதலிய குடியானவன் வேலைக்கு அவர் சிறிதும் தகாதவர். அப்படிப்பட்ட வேலைகளில் அவருடைய புத்தி நுழைவதே இல்லை. கிராந்தன் என்கிற ஊரிலே அவள் நாள்தப்பாமல் நியூடனைத் தன் வீட்டு விளைவுகளை விற்று வீட்டுக்குத் தேவையான பொருள்வாங்கிவரும்படிக் கடைக்கு அனுப்புவாள். அப்போது நம்பிக்கையான ஒரு வேலைக்காரனும் ஒருவன் அவரோடு கூடப் போவான். அவர் அந்த வேலைக்காரனையே கடையிலுள்ள வேலைகளையெல்லாம் பார்த்துவரும்படி விட்டுத் தான் தனக்கு வழக்கமான ஒரு வீட்டிலேபோய் உட்கார்ந்து பொழுதுபோமளவும் படித்துக்கொண்டிருப்பார். ஒவ்வொரு வேளையில் ஒரு வீட்டுக்கும் போ-

காமல் எங்கேயாவது ஒரு வேலியோரத்தில் உட்கார்ந்து படித்துக்கொண்டு கடைத்தெருவுக்குப்போன வேலைக்காரன் திரும்பி வருமளவும் அங்கேயே காத்திருப்பதுமுண்டு. புலங்களில் இருந்தாலும் அவர் செய்கிற காரியம் இப்படித்தான். யாதேனும் ஒரு புத்தகம் படிப்பதும், ஏதாவது ஒரு புதுமாதிரி யோசனைசெய்வதும், தானே ஏற்படுத்திய ஒரு ஜலயந்திரத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பதும், சமீபத்தில் எங்கேயாவது ஆற்றோரங்களில் உள்ள நுரைகளையெடுத்துக் காற்றில் விடுவதும் ஆகிய இப்படிப்பட்டவைகளே அவருடைய புத்திக்குக் காரியமாயிருந்தன. ஒரு ஆடு ஒரு மூலையில் ஓடிப்போனாலும் ஒரு மாடுவந்து பயிரை மேய்ந்தாலும் நெல்லைத் தின்றாலும் ஒன்றும் அவர் கண்களுக்குத் தோன்றுவதில்லை.

நியூடனுடைய மனப்போக்கைப்பார்த்து அவருடைய தாய், நாம் இந்தப் பிள்ளையை வீட்டுவேலைகளுக்காக வைத்துக்கொண்டிருப்பது தகுதியல்லவென்று தெரிந்து, தன்னால் கூடியவரையில் அந்தப் பிள்ளைக்குப் படிப்புகளே சொல்லுவிக்கவேண்டுமென்று முன் அவர் படித்துக்கொண்டிருந்த கிராந்தன் பாடசாலைக்கே மறுபடியும் அவரை அனுப்பினாள். சில மாதங்கள் அங்கேயிருந்தபிறகு குருவாயிருந்த அவருடைய சிற்றப்பன் கேம்பிரிட்ஜ் நகரத்திலுள்ள வித்தியாசாலையிற்போய்ப் படிக்கும்படியாக அவரைத் தூண்டி அவருக்கு இருபதாவது வயதான 1661-ம் வருஷத்தில் அப்படியே செய்தான்.

கேம்பிரிட்ஜ் பாடசாலைக்குப்போய்ச் சேர்ந்த சிலநாளைக்கெல்லாம் நியூடன், சந்திரனைச் சுற்றியிருக்கிற பளபளப்பான இரண்டு வட்டங்களைப் பரிசோதித்தறிந்தார்; கண்ணாடிகளைத் தூரதிருஷ்டிக்கு உபயோகமாகும்படித் தீட்டினார்; ஒளி, நிறம் இவைகளுடைய தன்மையைக் கண்டறிவதற்கு உபயோகமான பல பரிசோதனைகளும் செய்தார்.

அப்படியிருக்கக் கேம்பிரிட்ஜ் நகரத்தில் மிகக்கொடியதான கொள்ளைநோயொன்று உண்டாகவே, இனி அங்கிருப்பது தகுதியல்லவென்று உடனே சொந்தஊருக்குத் திரும்பிவந்து, அவ்விடத்தில் எந்த வஸ்துவும் பூமியில்வந்து விழவேண்டிய விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார். அப்படிச் சிந்தித்துக்கொண்டே ஒரு நாள் அவர் ஒரு தோட்டத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில், ஒரு மரத்திலிருந்து நாவற்பழம் ஒன்று கீழேவிழ, அதைப் பார்த்தவுடனே, எந்த நியாயத்தால் இப்பழம் மரத்தின்மேலிருந்து பூமியில் வந்துவிழுந்ததோ, அதே நியாயத்தால் ஆகாயத்திலுள்ள கிரகங்கள்கூடப் பூமியில் வந்துவிழவேண்டும் என்கிற கருத்து அவர் மனதில் தோன்றிற்றும். அதையே காரணமாகக்கொண்டு

அவர் ஆகர்ஷணசக்தி அதாவது இழுப்புக்கவர்ச்சியைப் பற்றிச் சிறந்த புத்தகமொன்று எழுதினார். அந்தப் புத்தகத்தின் அருமையைப்பார்த்து பிரான்சுதேசத்துச் சோதிட சாஸ்திரியொருவர் இப்படிப்பட்ட அருமையிலும் அருமையான புத்தகம் எழுதுகிறவர் உலகில் இவர்தவிர வேறொருவர் உண்டோவென்றுசொல்லி அதிசயித்தார்.

நியூடனுக்கு ரசாயனசாஸ்திரத்தில் விருப்பம் அதிகம். அதனால் அவர், உறையுந் தருணமான நீரிலுள்ள சூடுமுதற்கொண்டு எரிகிற தணலிலுள்ள சூடுவரையிலுமுள்ள சூடுகளுக்கு உண்டான பேதங்களையெல்லாம் வரிசையாகக் கண்டெழுதினார்; அக்கினி, அக்கினிச்சுவாலை இவைகளுடைய தன்மையைப்பற்றியும் ஒரு சஞ்சிகையெழுதினார்; தூரதிருஷ்டிக்கு உபயோகமான கருவிகளையும் விருத்திபண்ணினார்; இப்படியே இன்னும் பல காரியங்கள்செய்தார். அவர் ஒரு நிமிஷங்கூட ஒன்றும் செய்யாமலிருந்ததில்லை. அவர் மனமோ எப்போதும் ஆலோசனையிலேயே மூழ்கிக்கிடக்கும். அதனால் அவருக்கு ஒன்றின்மேல் ஒன்றாய்ப் பல பிரசித்திகளுண்டாகிக் கடைசியில், ஸர் ஐஸாக் நியூடன் என்கிற பட்டப்பெயர் கிடைத்தது.

அவர் தன்னுடைய வாழ்நாளில் மூக்குக்கண்ணாடி ஒருநாள்கூடத் தரித்துக்கொண்டதில்லை. அவ்வளவு காலத்தில் அவருக்கு ஒரே ஒரு பல்லுதான் விழுந்ததாம். அவர் பார்வைக்குக் குட்டை வடிவமாயும் எப்போதும் சிந்தித்த பாவனையாயும் இருப்பார். அவருடைய மயிர்கள் வெளேலென்று வெளுத்திருக்கும். எதிரே ஏதாவது ஒரு புத்தகமும் கையில் பேனாவுமில்லாமல் அவர் ஒரு நிமிஷங்கூட இரார்; வேலையில் வெகு கருத்தும் நடத்தையில் அதிக கம்பீரமும் உடையவர்; ஏழைகளிடத்தில் அவருக்குப் பக்ஷம் அதிகம்; அவர் ஒருநாளாவது கூட்டங்களிற்சென்று வீண்பேச்சு பேசி வம்பளந்ததில்லை. எப்போதும் ஏதாவது ஒரு நன்மையைக் கோரி ஒரு காரியம் செய்துகொண்டேயிருப்பார்; இவ்வளவிருந்தும் அவர் தன்னுடைய பெருமையை ஒரு பெருமையாக நினைப்பதில்லை.

இப்படிச் சிறந்தவிஷயங்களைக் கண்டுபிடிக்கும்படி வல்லமை உங்களுக்கு எப்படி உண்டாயிற்றென்று யாராவது கேட்டால், அவர், எல்லாம் ஓயாமல் ஆலோசிப்பதனாலேதான் உண்டாயிற்று; இப்போது நான் லோகோபகாரமான காரியம் ஏதாவது ஒன்று செய்திருப்பேனானால் அது, வருந்தி உழைத்ததனாலும், நிதானித்துச் சிந்தித்ததனாலும் உண்டானதேயன்றி வேறல்லவென்று சொல்வார். அவருடைய நேசர்கள் வந்து, உம்முடைய சாமர்த்தியத்தை உலகத்தில் யாவரும் என்ன புகழ்கிறார்கள்! இப்படிப்பட்ட கீர்த்தி உமக்குத்தவிர மற்றெவர்க்கு உண்டாகுமென்று சொன்

னால், அதற்கு அவர், என்னுடைய பிரயாசத்தைப்பற்றி உலகத்தார் என்ன நினைக்கிறார்களோ? எல்லாக்காரியமும் எனக்குக் குழந்தை விளையாட்டாய்த் தோன்றுகின்றனவேயொழிய அதில் யாதொரு வருத்தமும் தோன்றவில்லை. வாலிபத்தில் கடற்கரையில் ஓடுகளை யும் கூழாங்கற்களையும் பொறுக்கிக்கொண்டு விளையாடுவதுபோல இப்போது நான், இந்தப் பிரபஞ்சமாகிற கடற்கரையில் இன்னும் கொஞ்சம் சித்திர விசித்திரமான ஓடுகளையும் பளபளப்பான கற் களையும் பொறுக்கிவைத்துக்கொண்டு, விளையாடுகிறேனேயொழிய வேறில்லை யென்றார். இப்படியாக அவர் ஈசுவரசிருஷ்டியின் பெரு மைகளைக் காணக்காண, தன்னுடைய செய்கைகளெல்லாம் மிகவும் அற்பமாக அவர் கண்ணுக்குத் தோன்றின. இவ்வாறு சிறந்த காரியங்களிலேயே தம்முடைய காலத்தைப் போக்கிக் கடவுளு டைய மகிமைகளையெல்லாம் கண்டு வியந்து தம்முடைய எண்பத் தாறுவது வயதான 1727-ஆம் வருஷத்தில் இறந்துபோனார். இங்கிலாந்தில் சிறந்த புருஷர்களைப் புதைக்குமிடமான வெஸ்டுமினிஸ்டர் ஆபி என்னும் கோவிலிலேயே புதைக்கப்பட்டார். கேம்பிரிஜ் வித்தி யாசாலையின் துவாரத்தில் அவருடைய சிறந்த பிரதிமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரதிமையின் பீடத்தில் அடியில் வருகிற கருத்துள்ள வரிகள் எழுதப்பட்டிருக்கின்றன.

நவமாய்வானூர் கதிரவன்றன் கதிரைநன்கு கண்டறிந்து
தவறில்சீர்த்தி பெற்றவராம் நியூடனென்பார் தாமிவரே
அவமில்பளிங்கைக் கையேந்தி யகல்வானோக்கா யொருபொருளைக்
கவலையின்றிக் கருதிநிற்குங் கணிதநூலார் காணீரே.

கடைசியாய் அனைவரும் கவனித்துக் கருத்தில் வைக்கத்தக் கதாய் ஒரு மொழி சொல்லுகிறோம். நாம் செய்யும் ஆராய்ச் சிகளும் நியூடனுடைய ஆராய்ச்சிபோலவே யிருக்கவேண்டும். பண்டிதரென்றால் அவர்க்கே தகும். இந்த விஷயம் இப்படியிருக் கவேண்டுமென்று அவர் ஒருநாளும் சொன்னதில்லை; இது இப்ப டித்தானென்று கண்டறிந்தார். ஆராய்ச்சியென்றால் அப்படியல் லவோயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியமெல்லாம் விளை யாட்டிலாவதில்லை, பிரயாசத்தினாலேயே ஆகத்தக்கது; கண்டபடி ஊகிப்பதனால் ஆவதில்லை, நல்ல பாண்டித்தியத்தினாலேயே ஆகத் தக்கது. நாம் எதைப்பற்றி ஆலோசனைசெய்தாலும் இதேநியா யத்தை அனுசரிக்கவேண்டும். அதநின்காரணத்தை நிதானமாய் ஆராய்ந்து பொறுமையுடன் விசாரித்து உண்மையைக் கண்டறி வோமானால் அப்போதுதான் நாம் விஷயங்களை ஆராயுந் திறமை யுடையவரென்று சொல்வதற்கு உரியவர்களாவோம்.

அலை எழும்புவதேன்.

ஓ நம்முடைய நேசர்களே! சமுத்திரத்தில் அலைகள் பெரிது பெரிதாய் எழும்பி ஒன்றின்பின் ஒன்றாகப் புரண்டுவந்து கற்கட்டடமான கரைகளில் பளீலென்று மோதவும், கரையோரங்களிலுள்ள மணல்களின்மேல் மெதுவாய்ப் பாயவும் அநேகர் கண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமுண்டோ? அதைக் காண்கிறவர்கள் அநேகர் கடலில் அலை எழும்பிவருகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் கடலில் அலை உண்டாவதேனென்று அதைப்பற்றி யாராவது ஆச்சரியப்பட்டதுண்டா? அதற்குக் காரணம் என்னவென்று யாராவது விசாரித்ததுண்டா? சற்றே நிதானித்துக் கேளுங்கள்: அதன் காரணத்தைத் தெரியக்காட்டுகிறோம்.

அலை உண்டாவதற்குச் சந்திரனே முக்கிய காரணமாயிருப்பதால், அமாவாசைச் சந்திரனுக்கும் பருவத்துச் சந்திரனுக்கும் உள்ள வேற்றுமை இன்னதென்பதை முதலில் ஒருவாறு தெரிந்துகொள்வது நலம்.

சந்திரனுக்குச் சுயமாய் ஒளி கிடையாதென்பது அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். சந்திரன்மேல் சூரியனுடைய ஒளி பிரகாசித்தால்மாத்திரமே அது பளபளப்பாய்ப் பிரகாசிக்கின்றது. சந்திரகோளத்திலுள்ள ஜனங்களும் தம்முடைய சிறுவர்களுக்கு இப்பூமியைப்பற்றி இதேமாதிரியான கதைகளே சொல்லிக்கொண்டிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை: நாம் இருக்குமிடம் நமக்கு இப்படிச் சாதாரணமாய் இருந்தாலும் பூமியிலுள்ளவர்களுக்கு வெகு பளபளப்பாய்த் தோன்றும்; ஏனெனில், சூரியனுடைய ஒளி பூமியைச் சுற்றியிருக்கிற வாயுமண்டலத்திலுள்ள மேகங்களில் பிரகாசித்து அங்கிருந்து சந்திரனிடத்தில் பிரதிபலிப்பதனால் அப்படி ஆகிறதென்று அவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்வார்கள்.

வெண்மையாயும் வட்டமாயும் இருக்கிற சலவைக்கல் ஒன்றை எடுத்து அதில் ஒரு பக்கம்முழுதும் கறுப்புவர்ணம் பூசிவிட்டால், அதைப் பூரணமாய்ப் பிரகாசிக்கின்ற சந்திரனுக்கு ஒப்பாகச் சொல்லலாம். எப்படியெனில், சூரியன் தனக்கு எதிரே இருக்கின்ற கோளத்தின் ஒரு புறத்தைமட்டுமே பிரகாசிக்கச் செய்வானாதலால், சூரியனுக்கு நேராயிருக்கின்ற சந்திரனுடைய பக்கம்மாத்திரமே பளபளப்பாய்த்தோன்றும்; மறுபுறம் இருண்டுதான் இருக்கும். அந்தச் சலவைக்கல்லின் வெண்மையான பாகம்

முழுதும் நமக்கு நேராயிருக்கும்போது பூர்ணிமைச் சந்திரன்போலவும், அதை மெதுவாகத் திருப்பி வெண்மையான பாகம் கொஞ்சங் கொஞ்சமாய் மறையச்செய்தால் அப்போது பஞ்சமி அஷ்டமி தசமி முதலான தினங்களில் தோன்றுகிற சந்திரன்போலவும், வெண்மையான பாகம்முழுதும் மறைந்துபோனுல் சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலே நிற்கிற சந்திரன்போலவும் அதாவது அமாவாசைச் சந்திரன்போலவும் அந்தக் கல் விளங்கும்.

திருதீயை சவுத்திமுதலிய தினங்களில் ஆகாயம் நிர்மலமாய் இருக்கையில் சந்திரனைப்பார்த்தால், பளபளப்பாகப் பிறைச்சந்திரன் தோன்றுவதுமாத்திரமேயன்றிச் சந்திரபிம்பம் முழுதும் வட்டமாய் மங்கலாகத் தோன்ற நாம் நன்ருய்க் கண்டிருக்கிருேமாதலால், அதைக்கொண்டே அமாவாசை யன்றுகூடச் சந்திரன் ஒளியில்லாமல் இருண்டவடிவமாய்க் காணப்படுமென்பதை நாம் நன்ருய் அறிந்துகொள்ளலாம். அமாவாசையன்று சந்திரன் எங்கும் போய் விடுவதில்லை; சூரியன் பக்கத்திலிருப்பதால் நமது கண்ணுக்குப் பிரகாசிப்பதில்லை. அதற்குத் தகுந்த கருவியைக் கொண்டுபார்த்தால் நன்ருய்த் தோன்றும்.

சந்திரன் அந்தந்தக் காலத்தில் வெவ்வேறுவிதமாகத் தோன்றுவதெல்லாம் அதின் இடம் வேறுபடுவதனுலேயே ஒழிய வேறல்லவென்று இதனுல் தெளிவாய்த் தெரியவந்ததல்லவா? சந்திரன் பூமியைச்சுற்றி ஓடிக்கொண்டிருப்பதனுல், ஒரு பக்கத்தில் கறுப்பு நிறம் பூசிய சலவைக்கல்லிற் காட்டிய திருஷ்டாந்தம்போலவே, ஒவ்வொரு வேளையில் அதாவது இப்பூமிக்கு ஒருபுறத்தில் சூரியனும் அதற்கு நேரான மற்றொருபுறத்தில் சந்திரனும் இருக்கிற காலங்களில் சூரியன் அதன்மேற் பிரகாசிக்கிற பாகம்முழுதும் நமக்குத் தெரிகின்றது; அதைத்தான் பூர்ணிமாசையென்கிருேம். சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் நடுவே வருகிறகாலத்தில் அந்தப் பக்கம் நமது கண்ணுக்குத் தெரிவதேயில்லை; அப்போது அமாவாசை என்கிருேம்.

சந்திரபிம்பத்தை நாம் நுட்பமாகப் பரிசோதித்துப் பார்ப்போமானுல், (தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்கொண்டு பார்ப்பதே உத்தமம்.) ஒருபுறத்தில் பளபளப்பாயும் மறுபுறத்தில் இருண்டுமிருக்கிற மலைகளும் அம்மலைகளில் கணவாய்களும் காணப்படும். அம்மலைகளெல்லாம் இத்தாலிதேசத்திலுள்ள விஷூவியஸ் என்னும் எரிமலைபோன்ற எரிமலைகளாகத் தோன்றுகின்றன. இப் பூமியிலுள்ள எரிமலைகளெல்லாம் லாவா என்னும் ஒருவகை எரிகல் திராவகத்தை வெள்ளமாகப் பெருக்குவதுபோல் அவையும் பெருக்கிக்கொண்டுதான் இருக்கும்.

அலை உண்டாவதற்குக் காரணம் இன்னதென்பதை இப்போது விசாரிப்போம். நியூடன் கண்டுபிடித்த ஆகர்ஷணசக்தியென்னும்

இழுப்புக்கவர்ச்சியைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொண்டாலொழிய அது தெளிவாய்ப் புலப்படாது. ஆகர்ஷண சக்தி இப்படிப்பட்டதென்று சென்ற டிசம்பர்மாதச் சஞ்சிகையிலே ஒருவாறு சொல்லியிருக்கிறோம். அதாவது: இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப் பொருளும் அததின் பிரமாணத்திற்கேற்றபடி மற்றெந்தப்பொருளையும் தன் இடத்திற்கு இழுக்கின்றது. சூரியன் பூமிக்கும் தனக்கும் இருக்கிற தூரத்திற்கேற்றபடி பூமியை இழுக்கின்றது. அப்படியே பூமிதன் பரிமாணத்துக்குத்தக்கபடிச் சூரியனை இழுக்கின்றது. இப்படியே பூமியும் சந்திரனும் ஒன்றுக்கொன்று இழுத்துக்கொண்டிருக்கின்றன. சூரியன் சந்திரன் முதலிய மற்றக் கிரகங்களும் இவ்வாறே தாம் ஒன்றுக்கொன்று இழுத்துக்கொண்டிருக்கின்றன. இதனால் சந்திரன் அததின் தூரத்திற்கும் பரிமாணத்திற்கும் ஏற்றபடி எல்லாவற்றையும் இழுக்கிறதென்று தெரிந்ததல்லவா? இந்தப் பூமியைவிட அதன்மேல் இருக்கிற நீர் சந்திரனுக்குச் சமீபமாதலாலும், நீர் நிலத்தைப்போல அவ்வளவு கடினமன்றாதலாலும், சந்திரன் பூமியைவிடச் சமுத்திரத்தையே அதிகமாய்த் தன் இடத்திற்கு இழுக்கின்றது. அதனால் உண்டாகிற காரியம் என்னவெனில், சமுத்திரத்திற்கு நேராய் உயரச் சந்திரன் வரும்போதெல்லாம் சமுத்திரத்தில் அலை எழும்புகின்றது. அப்படியே சந்திரனுக்கு நேரான பக்கத்துக்குப் பின்புறத்தில் நீரைவிட நிலமே சந்திரனுக்குச் சமீபமாய் இருப்பதால் அங்கே பூமிதான் அதிகமாய் இழுக்கப்படுகின்றது. அதனால் அந்தப்புறத்தில் எப்போதும் ஜலம் கொஞ்சம் உப்பலாயேயிருக்கும். இப்படியாகப் பூமி தன்னைத்தானே ஒருதரம் சுற்றுவதற்குள், அதாவது இருபத்துநான்கு மணிநேரத்தில், பூமியில் சந்திரனுக்குச் சமீபமாயும் வெகுதூரமாயும் இருக்கின்ற இரண்டுபக்கங்களில் ஜலம் மேலெழுகின்றது; மற்ற இரண்டுபக்கங்களிலும் தாழ்கின்றது.

இவற்றைச் சந்திரன் எப்படி இழுக்கிறதோ அதேவிதமாகவே சூரியனும் இழுக்கின்றது. அதனாலேதான் அமாவாசை தினங்களில் சந்திரன் சூரியன் இரண்டும் ஒரேபுறமாய் நின்று சமுத்திரத்தை இழுப்பதனால் ஜலம் விசேஷமாய்ப் பொங்கி அலைகள் மிகப் பெரிதாய்க் கிளம்புகின்றன. அப்படி ஜலம் அதிகமாய்ப் பொங்கிவந்து கடற்கரையோரத்திலுள்ள பல வீடுகளை அழித்துவிடக்கூட நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோமல்லவா? அப்படியில்லாமல் சூரியன் ஒருபுறத்திலும் சந்திரன் ஒருபுறத்திலும் நின்று இழுக்கிறகாலங்களில் அலைகள் விசேஷமாயில்லாமல் அடங்கியே இருக்கும்.

இன்னும் சற்றே நிதானித்துப்பார்ப்போமானால், சமுத்திரத்தில் அலைகிளம்ப ஆரம்பிக்க நாளுக்குநாள் ஒருமணிநேரம் ஏன் அதிகமாய்ச் செல்லுகிறதோ அதற்கும் காரணம் இன்னதென்று

தெரிந்துகொள்ளலாம். சந்திரன் ஸ்திரமான கிரகமல்ல; ஏறக்குறைய இருபத்தெட்டு தினத்தில் பூமியைச் சுற்றி ஒருதரம் ஓடுகிறதென்பது தெரியுமே. இன்றையதினம் இராத்திரி பத்துமணிக்கு இச்சென்னைக்கு நேராய்ச் சந்திரன் வந்ததானால், பூமி தினம் ஒரு சுற்று சுற்றிக்கொண்டிருப்பதனால், சந்திரன் அதே இடத்தில் நிலையாய் இருக்கிறபக்ஷத்தில், மறுநாள் பத்துமணிக்கே சந்திரன் சரியாய் இச்சென்னைக்கு நேரே வந்துசேரும். அப்படியில்லாமல் அதே காலத்தில் சந்திரனும் கொஞ்சம்தூரம் ஓடுகிறதாகையால், பத்துமணிக்குச் சரியாய் வருவதில்லை; பத்தடித்துச் சுமார் ஐம்பதுநிமிஷத்திற்குப்பிறகு சந்திரன் சென்னைக்குநேராய் வருகின்றது. அதாவது: மறுநாள் பதினொன்று அடிக்கச் சுமார் பத்துநிமிஷத்திற்குமுன்னே அலை எழும்புகின்றது. இப்படிச் சந்திரனும் சூரியனும் ஜலத்தை இழுக்கிறதென்றால் அது இப்பூமியை விட்டு ஏன் ஆகாயத்தில் எழும்பிப்போய் விடவில்லையென்று கேட்கிறீர்களோ? ஜலம் பூமியின்மேலேயே இருப்பதால், சூரியன் சந்திரன் முதலியவற்றைப்பார்க்கிலும் பூமியே ஜலத்தை அதிகமாய் இழுக்கின்றது. அதனாலேதான் நீர் நிலத்தைவிட்டுப் போய்விடும்படியான காலம் நேரிடுவதில்லை.

சுதேசசரித்திர விலாசம்.

(தொடர்ச்சி.)

உமாயூன் சக்கரவர்த்தி பகைவரால் ராஜ்யத்தினின்றும் துரத்தப்பட்டு ஓடிப்போய் வழியிலே ஒரு பள்ளன் வீட்டில் தங்கியிருந்து அப்புறம் போய்விட்டானென்று சொன்னோமல்லவா? அது முதல் அந்தப் பள்ளனுடைய குடும்பம் செல்வமும் சாய்காலுமாய் விருத்தியடையத் தலைப்பட்டது. உமாயூன் கொடுத்துவிட்டுப்போன பொருளைக்கொண்டு பள்ளன் வேண்டிய ஆடு மாடுகள் வாங்கிவிற்றுச் சிலநாளைக்குள்ளே அவன் கொடுத்த இரண்டாயிரம் ரூபாயை மேன்மேலும் விருத்திபண்ணி விசேஷ தனவானாயினான்.

அவனுடைய மூத்தமகள் சிறுபிராயத்தில் காணப்பட்டது போலவே நல்ல பருவத்தில் யாவரும் பார்த்து வியக்கத்தக்க சிறந்த வடிவழகோடு மிகப் பெருமைபெற்ற பெண்மணியானாள். ஆயினும் அவளுக்கு உடனே கலியாணமாகவில்லை. பள்ளன் பெண்ணை உயர்ந்த ஜாதியிற் பிறந்தவன் எவன் கலியாணஞ்செய்துகொள்வான்? சுயஜாதியில் கலியாணஞ்செய்துகொள்ள அவளுக்குச் சிறிதும் விருப்பமில்லை. அவர்களுடைய ஏழ்மையையும் ஜாதித்தாழ்வினாலுண்டான இகழ்ச்சியையும் கண்டு அந்த ஜாதியார் எல்லோரிடத்திலும் அவளுக்கு வெறுப்பு உண்டாயிற்று.

அவர்களிடத்தில் ஆசைகொள்ளும்படி அவள் தன் மனதை வேண்டுமென்று எவ்வளவுதான் திருப்பினாலும் அது திரும்ப வில்லை. அதுகண்டு அந்தப் பெண், கலியாணமில்லாமல் ஆயுள்ள வும் இப்படியே துக்கப்படவேண்டுவதுதான் நம்முடைய தலைவிதி யென்றெண்ணி, அதைப்பற்றி எப்போதும் மனதில் கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தாள்.

தன் பெண்ணினுடைய பரிதாபத்தைப்பார்த்து அந்தப் பள் ளனுக்கும் அதிக விசனமுண்டாயிற்று. ஆயினும் அதைத் தீர்க்க அவனால் ஆகவில்லை. அந்த நிலையைப்பார்த்து அவன், இவ் வுலகவாழ்க்கை எப்போதும் எப்படிப்பட்டவனுக்கும் மேன்மே லும் துக்கங்களையே தருகிறதென்றும், தன் இனத்தாருக்குள்ளே தான் கொஞ்சம் பெருமைபெறும்படி அப்போது தனக்கு உண் டான கொஞ்சம் பாக்கியமே, இன்னும் எவ்வளவோ சங்கடங் களுக்கெல்லாம் இடமான இப்படிப்பட்ட துக்கத்தைத் தந்ததென் றும் கண்டுகொண்டான். ஒருவன் எவ்வளவு ஏழ்மையான நிலை யிலிருக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு நலம். அந்தஸ்து உயர உயர, சங்கடங்களும் மனவருத்தங்களுமே அதிகமாகின்றன வென்றும் அவனுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. இப்போது அவன் தனிகனானது உண்மையே; ஆயினும் அந்தச் செல்வம் இனத்தாரினின்றும் அவன் அந்தஸ்தை மிகவும் உயர்த்தி, அவ னைத் தனியே வாழச்செய்தது; அப்படியே அவன் மகளையும் தனி யாக்கி அவள் இவ்வுலகவின்பம் ஒன்றையுமே அனுபவிக்கவொட் டாமற்செய்தது. அவன் எவ்வளவுதான் சீதனங்கொடுத்துத் தன் மகளைக் கட்டிக்கொடுக்கத் துணிந்தாலும் பள்ளன்மகளை உயர்ந்தகுலத்தார் ஒருவரும் வந்து கைபிடியார்கள். அந்தப் பெண் தன் மனதிற்கொண்ட ஒருவிதமான அகமதிப்பை விட் டாலொழிய அவளுக்குச் சுயஜாதியிலும் விவாகமாவதற்கில்லை.

அநேகம் பள்ளர்கள் மோகனமென்னும் அந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்ள ஆசைகொண்டு அடிக்கடி வந்து மன்றாடினார்கள். ஆயினும் அவள் அவர்களுடைய நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்டாளேயொழிய ஒருவரிடத்திலாவது மனம் இரங்கவில்லை. இப்படியாக அவள் தனித்தே காலங்கழிக் கும்படியாயிற்று. நீ ஒருவரும் வேண்டாமென்று விலக்கிவிடுகி றாயே, ஆனால் நீ கலியாணமே இல்லாமல் கன்னிகையாகவே தான் காலங்கழிக்கப்போகிறாயோவென்று யாராவது வந்துகேட் டால் அதற்கு அவள், அப்படியில்லை; நான் என்னசெய்வேன்; ஒருவரிடத்திலாவது என் மனம் பதியவில்லையே; யாரிடத்தில் என் மனம் பற்றுகிறதோ அவருக்கு மணமாலைசூட்ட ஆவலுட னே காத்திருக்கிறேன் என்று பதிலுரைப்பாள். ஆயினும் ஒருவ

ரிடத்திலாயினும் அவள் மனம் பற்றவுமில்லை, அவளுக்குக் கலியாணம் ஆகவுமில்லை.

இப்படியே மோகனத்திற்குப் பதினைந்து வயதாய்விட்டது. தம்முடைய பெண்ணுக்குச் சீக்கிரமே கலியாணஞ்செய்து பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டிருந்த அவளுடைய தாய்தந்தையர்களுக்கு எவ்வளவு துக்கமாயிராது! அவர்கள் எப்போதும் அதேசிந்தையாய்த் தங்களால் ஆனமட்டும் அந்தப் பெண்ணுக்குப் புத்திசொல்லித் தங்கள் ஜாதியிலேயே ஒருவனைக் கலியாணஞ்செய்துகொள்ள வேண்டினார்கள். ஒன்றும் அவள் மனதில் ஏறவில்லை; தான் பிடித்ததே பிடிவாதமாயிருந்தாள்.

அப்படியிருக்க ஒருநாள் ராத்திரி மோகனம் பாயிலே படுத்துத் தூங்குகையில், நல்லபாம்பொன்று வந்து அவள் தலையின் கீழ்த் தலையணையாகச் சுருட்டிக்கொண்டிருந்தது. அதின் உடம்பு சில்லென்று மேலேபடவே அவள் இதென்னவென்று திடுக்கிட்டு எழுந்தாள். உடனே அந்தப் பாம்பும் எழுந்து படத்தைவிரித்து ஆடிக்கொண்டு அவள் கழுத்தைச் சுற்றிக்கொண்டு அவளை அவ்விடம்விட்டு நகரவொட்டாமற்செய்தது. பாம்பு தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறதென்று அவளுக்குத் தெரியவே, கைகால்களெல்லாம் குடைவதுபோலவும் மார் அடைப்பதுபோலவும் விஷச் செய்கை என்னென்ன உண்டோ அவையெல்லாம் அவள் புத்தியில் தோன்றின. கைகால்களை அசைக்கக் கூடவில்லை, சுவாசம் விடக்கூடவில்லை; இப்படிச் சற்றே தவித்தாள். இரண்டொரு நிமிஷத்தில் அந்தப் பாம்பு அவள் கழுத்தினின்றுமிறங்கி மெதுவாய் ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் ஓடிப்போயிற்று. அவள் உடம்பில் காயம்மட்டும் கொஞ்சம்கூடப் படவில்லை. சிறிதுநேரத்தில் அவள் கொண்டிருந்த பயமும் தணிந்தது. பாம்புவந்த செய்தி அவ்வீட்டுக்காரர் எல்லாருக்கும் தெரிந்து அதைத் தேடிப்பார்த்தார்கள். அது அந்த வீட்டில் எங்கும் அகப்படவில்லை; அது என்ன புதுமையோ?

மோகனம் அப்படியே படுத்துக்கொண்டிருந்தாள். பாம்பு வந்து நம்மைப் பிடித்ததே இது என்னவென்கிற சிந்தைமட்டும் அவள் மனதில் புகுந்துகொண்டது. ஆயினும் அவள் பாம்பின் கையில் அகப்பட்டுத் தப்பினதனால் இது ஏதோ ஒரு நல்லகாலத்திற்குத்தான் குறிப்பென்று அனைவரும் எண்ணினார்கள். இதற்கு முன்னே அவள் இப்படியே இரண்டுதரம் பெருத்த அபாயத்தினின்றும் தப்பிப்பிழைத்தவள். அந்தக் கிராமதேவதை அவர்கள் செய்த பூஜையினால் அவர்களிடத்தில் பரிபூரணமாய்க் கருணைகூர்ந்திருப்பதனாலேதான் அப்படியெல்லாம் ஆயின. ஆயினும் பாம்பைக் கண்டதினால் உண்டான திகிலினால் அவள் மனதுமட்டும்

பதைத்துக்கொண்டேயிருந்தது; பிறகு ராத்திரி அவளுக்கு நித்திரையேவரவில்லை. அப்படி அவள் நித்திரையில்லாமலிருந்தும், கனவுபோல் என்னென்னவோ தோற்றங்கள் அவள் மனதில் தோன்றிக்கொண்டேயிருந்தன. அப்படியிருந்து விடியனேரத்தில் அற்புதமான கனவு ஒன்று கண்டாள். அப்போது தான் ஒரு பள்ளச்சியாய் அவள் மனதிற்குத் தோன்றவில்லை. சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்த ஒரு மகாராஜாவினுடைய மனையாட்டியாகவும், ராஜபரிஜனங்களெல்லாம் சூழ்ந்துநிற்கத் தான் அவர்களின் நடுவே இருப்பதாகவும், தன் இனத்தாரெல்லாம் கீழேவிழ்ந்து தன்னை வணங்கிக்கொண்டிருப்பதாகவும் இப்படி அதிசயமான கனவு ஒன்று கண்டு உடனே கண்ணை விழித்துப்பார்த்தாள். ஒன்றும் காணப்படவில்லை. சூரியன் உதயமாயிருக்கக்கண்டு அதைக் கையெடுத்துத் தொழுது எழுந்தாள்.

அந்தப் பள்ளன்வீட்டுக்குக் கொஞ்சம்தூரம் அப்பால் வள்வச்சி ஒருத்தியிருந்தாள். பற்பல மாயைமந்திரம் தெரிந்தவளென்றும், நடக்கப்போகிற சங்கதிகளையெல்லாம் நன்றாய்க் கண்டறிந்து சொல்லுகிறவளென்றும் அந்தப் பக்கமெங்கும் அவள் பிரசித்தி பெற்றிருந்தாள். அவர்களுடைய வல்லமையைப்பற்றிப் பலவிதமாய்ச் சொல்வார்கள். அவர்கள் மனிதர்களுடைய குடல்களைத் தின்பவர்களாம். அவர்கள் தங்கள் பார்வையினாலும் மந்திரத்தினாலும் பிறருடைய குடல்களைத் திருடுவார்கள். பார்வையினாலேயே யாவரையும் மயங்கச்செய்து அவர்களிடத்திலிருந்து மாதுளம் விதைபோன்ற ஏதோ ஒரு பொருளைத் திருடித் தமது கால் தசையில் ஒளித்துவைத்துக்கொள்வார்கள். அவர்கள் ஒரு நெல்லை நெருப்பிலே போட்டால் அது பெரிய பூசணிக்காயளவு பொரிகின்றது. அந்தப் பொரியை அவர்கள் நாலுபேர் பகுத்துத்தின்பார்களானால், உடனே அவர்களுடைய மாயையால் மயக்கப்பட்டவர்கள் இறந்துபோவார்கள். யாராவது ஒருவன் அந்த மாயாவியினுடைய கால் தசையை அறுத்து அங்கிருக்கும் தானியத்தை எடுத்து மயக்கப்பட்டவனுக்குக் கொடுத்துத் தின்னச்சொன்னால் உடனே அவன் சாகாமல் பிழைப்பான். ஆயினும் அப்படி ஒருவரும் செய்யவொட்டாமல் அந்த மாயாவிகள் வெகு எச்சரிக்கை செய்துகொண்டிருப்பார்கள். இவைகளோடுகூட அந்த மாயக்காரர்கள் தூரதேசத்துச்செய்திகளை ஒரு நொடியில் அறிந்துசொல்வார்கள்; எவ்விதமான நோயையும் தங்கள் மந்திரத்தினால் தீர்ப்பார்கள் என்று இப்படி அவர்களுடைய மகிமையைப்பற்றிப் பலவிதமாய்ச் சொல்வதுண்டு.

இவ்விதமான பல விநோதச் செய்கைகளுள்ள ஒரு வள்வச்சியைப்பற்றி மேலேசொன்ன பள்ளன் மகளான மோகனம் வெகுவாய்க் கேள்விப்பட்டிருந்தாள். அந்தப் பெண் அவளை ஒருநா

ளாவது கண்டதுமட்டுமில்லை. மனிதர்களுடைய விதிப்பயனை நன்ருய்க் கண்டறிந்து நடக்கப்போகிற செய்கைகளைச் செம்மையாய்ச் சொல்லும் திறமையுடையவளென்று பிரசித்திபெற்றிருந்ததோடுகூட அந்தத் தேசத்தில் பஞ்சமுண்டானாலும் கொள்ளைநோய் உண்டானாலும் மற்றெந்தத்தீமை உண்டானாலும் எல்லாம் அவளாலேயே செய்யப்படுகின்றனவென்று எண்ணி அனைவரும் பயப்படத்தக்கவளாயிருந்தாள்.

அவளை எப்படியாவது போய்ப்பார்க்கவேண்டுமென்று வெகுநாளாய் ஆவல்கொண்டிருந்த மோகனம் ஒருநாள் அவளிடத்திற்குப் புறப்பட்டுப்போனாள். அந்த ஜோசியக்காரி ஒரு மலையடிவாரத்தில் வசித்துக்கொண்டிருந்தாள். அவ்விடம் மனிதசஞ்சாரமேயில்லாமல் தனிப்புறமாக வெகு ரமணியமாயிருந்தது. மோகனம் அவ்விடத்திற்குப் போக அஞ்சிக்கொண்டே மெதுவாய் அவள் அண்டைபோய்ச் சேர்ந்தாள். அத்தருணத்தில் அந்த வள்வச்சி ஒரு பாறையின்மேல் உட்காந்திருந்தாள். சப்பைமூக்கும் கீரைவிதைபோல் மண்டையில் அழுந்திய கண்ணும், குழக்கட்டைபோன்ற உதடும், முறம்போன்ற காதுமாய் அவள் வடிவம் மிகவும் பார்க்க வழங்காமல் இருந்தது. அவளுடைய வடிவத்தைப்பார்த்தால் சுமார் நூறுநூற்றைம்பது வயதானவள்போல் தோன்றிற்று. மோகனம் கொஞ்சம் தூரத்திலிருந்து அவளைப் பார்த்தவுடனே தைரியமாய்ச் சரேலென்று அவள் அண்டைபோய் அவள் கையில் காணிக்கையாக ஒரு மோகராகொடுத்து, தாயே! எனக்கு ஒரு ஜோசியம் சொல்லவேண்டும்; வருங்காலத்தையெல்லாம் கண்டறிந்துசொல்லத் தங்களுக்கு நன்ருய்த் தெரியுமே. இப்போது இவ்வுலகத்தில் நான் வாழ்கிற வாழ்க்கை எப்படியிருக்கிறதென்ருல், மாஞ்செடியொன்றுமில்லாமல் எரிந்துபோன நடுக்காட்டிலே செங்குத்தான ஒரு குன்றின்மேல் ஏறிக்கொண்டு தவிப்பவளுடைய பிழைப்புபோல் இருக்கிறதென்று சொன்னாள். அதைக்கேட்டு அவள், குழந்தாய் அப்படியே கண்டறிந்துசொல்லுகிறேன்; இப்படிப்பட்ட சிறந்த விஷயங்களையெல்லாம் சும்மா கண்டறிந்து சொல்லக்கூடுமா? இதற்கெல்லாம் அதிக விலைகொடுத்தே ஆகவேண்டுமென, மோகனம் மற்றொரு மோகராவை அவள் மடியிலே போட்டாள்.

அதைப்பார்த்து அந்தக் கிழவி, பெண்ணே! உன்னைப்போல தாராளமான கை ஒருவர்க்கும் இல்லை. உன் இஷ்டமெல்லாம் சீக்கிரமே கைகூடும்; துரிதத்திலேயே உனக்கு நல்ல மதிப்பும் க்ஷேமமும் உண்டாகப்போகிறது; என்னோடுகூடவே வா என்று சொல்லித் தான் முன்னே சென்ருள். மோகனமும் அவளைப் பின் தொடர்ந்துபோனாள். அவள் வசிக்கிற குகையின் வாயில் ஒருவர்கூடத் தாராளமாய் நுழைந்துபோகக் கூடாததாயிருந்தது.

அதற்குள் நுழைந்தவுடனே ஒருவர்முகம் ஒருவர்க்குத் தெரிய வில்லை. அந்தப் பேரிருளைப்பார்த்து மோகனம் மிகவும் பயந்து அப்புறம் உள்ளே ஒத்திப்போக அஞ்சி, என்ன சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டோமென்று அங்கேயே திகைத்துநின்றாள். சிறிது நேரம் கழித்து அந்தக் கிழவி உள்ளேபோய்வந்து மோகனத்தைப்பார்த்து, குழந்தாய்! எதைப்பற்றி நீ இப்போது கேட்கிறாயென, அந்தப் பெண், அம்மா நான் ஒரு பள்ளச்சி; பள்ளன் பணக்காரனானதற்குக் காரணங்கூட நான் எடுத்துச் சொல்லவேண்டுமோ? இவ்வுலகம் முழுமையும் பொதுவாய்ப் பார்க்கிற கடவுள் கண்ணுக்கு எல்லாம் ஒன்றுதானே. என் எண்ணமெல்லாம் தங்களுக்குத்தானே தெரியாதா? நான் வாயைவிட்டுச் சொல்லவேண்டுமோ என்றாள்.

அதைக்கேட்டு வள்வச்சி, உன் இஷ்டப்படியே உனக்குக் கலியாணம் நடக்கும்; சுயஜாதிப்புருஷனைக் கலியாணஞ்செய்துகொள்ளலாம்; ஒருவேளை அப்படி நடவாமற்போனாலும் போம், எப்படியாவது உனக்குக் கலியாணமாவதற்குச் சந்தேகம் இல்லையென, மோகனம், ஒரு பள்ளனைக் கலியாணஞ்செய்துகொள்வதைவிட எனக்கு உயிராவிடுவதே நல்லது என்று சொன்னதற்கு அவள், அப்படி ஒருபோதும் நடவாது; உனக்குக் கலியாணமாவது நிச்சயம்; நீ பெண்ணும் பிள்ளையுமாக வெகு செல்வமாய் வாழ்வாய்; இன்னும் விசேஷமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால், உன் முகக்குறிகளையும் நக்ஷத்திரபலன்களையும் நன்றாய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்; நாளை இந்நேரத்திற்கு வந்தால் நன்றாய்ப் பார்த்துச்சொல்லுகிறேன்; சகுனங்கள் நன்றாய் ஆகிறது; போய்வா என்று சொல்லி, இவளை இந்தக் குகையைத்தாண்டி வெளியே கொண்டுவிடு என்று தன் நாயை ஏவினாள். உடனே அந்த நாய் வெளியே ஓடிக் குகைவாயிலண்டை போய்நின்று குரைத்தது. அதைக்கேட்டு ஜோசியக்காரி, அதோ நாய் அழைக்கிறது; நாளையதினம் வந்தால் இன்னும் எவ்வளவோ நல்ல சங்கதிகளெல்லாம் கேட்கலாம். வருங்காலம் முழுமையும் ஒரேநிமிஷத்தில் கண்டறிவது மிகவும் கடினமல்லவா? நாளையதினம் வரும்போது மோகராவைமட்டும் மறவாதே; கூலியில்லாமல் எந்தக்காரியந்தான் ஆகும் என்றாள்.

பேராசைகொண்டு அவள் சொன்ன சொல்லைக்கேட்டு மோகனத்திற்குக் கொஞ்சம் அவளிடத்தில் வெறுப்புண்டாயிற்று. ஆயினும் தன் விதி எப்படிப்பட்டதோ தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆவல் அதிகமாயிருந்ததனால், எவ்வளவு செலவானாலும் சரி, அதை அவசியம் அறிந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டே வீட்டுக்குப்போனாள். அவள் போய்வந்த செய்தியைக் கேட்டு வீட்டில் தாய்தந்தையர்களும் சந்தோஷப்பட்டார்கள்.

வீட்டிற்குப்போயும் மறுநாள் எப்போது அந்த வேளை வரப்போகிறதென்று மோகனம் அதே ஞாபகமாய்க் காத்துக்கொண்டிருந்தாள். அந்நேரமானதும் மறுபடி மோகனம் அவளிடம்போய்ச்சேர, ஜோசியக்கிழவி மோகனத்தைப் பார்த்தவுடனே கையை நீட்டினாள். மோகனம் ஒரு மோகராகொடுத்தாள். அதைக்கண்டு அந்தக் கிழவி முகங்கறுத்து நீட்டினகை நீட்டினபடியே இருக்கவே மோகனம் மற்றொரு மோகராவும் கொடுத்தாள். உடனே அவள் தன் பேராசை அடங்கினவள்போலக் கையை மூடிக்கொண்டு எழுந்து, உள்ளேவா குழந்தாய் என்றுசொல்லி அவளை அழைத்துக்கொண்டு உள்ளேபோனாள். மோகனமும் முதனாள்போலவே அந்தப் பேரிருளான குகைக்குள்ளேபோய் ஒன்றுந்தெரியாமல் நின்றாள். சிறிதுநேரம் கழித்துவந்து அந்தக் கிழவி, இன்றையதினமும் உன் பாக்கியத்தை நன்றாய்ச் சொல்லக்கூடவில்லை; நாளை வாவென்று சொல்ல, மோகனத்திற்கு மிகவும் விசனமுண்டாயிற்று; மோகராவை மறவாதேயென்கிற வார்த்தையையும் கேட்கவே அவள் ஒன்றும் பதில்உரைக்க நாவெழாமல் சரேலென்று புறப்பட்டு வீட்டுக்குப் போய்விட்டாள். தன் அதிர்ஷ்டத்தை அறியவேண்டுமென்று அவள் கொண்டிருந்த பேராவலுக்கு இந்த வெறுப்பு எவ்வளவு! மறுநாளும் அப்படியே மோகனம் அவளிடத்திற்குச் சென்றாள்.

பலநாள்வரையில் இப்படியே நடந்துவந்தது. ஒவ்வொரு தடவையிலும் கூலிமட்டும் குறையவில்லை. இப்படி வெகுநாளாகவே, அந்தக் கிழவி மோகனத்தின் பொறுமையைப்பார்த்துப் பரிதாபப்பட்டாளோ என்னவோ, ஒருநாள் நாளை இரட்டிப்புகூலி கொண்டுவந்தால் உன் அதிர்ஷ்டத்தைத் தெரிந்துகொண்டுபோகலாம் என்று உறுதியாய்ச்சொன்னாள். பொறுத்ததெல்லாம் பொறுத்தோம்; இன்றையதினம்மாத்திரம் பொறுப்போம் என்று அவள் அப்படியே மறுநாளும் போனாள். அவளைப் பார்த்தவுடனே ஜோசியக்கிழவியும் புன்னகையோடு கூலியை வாங்கிக்கொண்டு, பையிலிருந்து ஒரு பாம்பை எடுத்துத்தட்டிப் படமெடுத்து ஆடச்செய்து மோகனத்தை உள்ளே அழைத்துக்கொண்டுபோனாள். மோகனம் அந்தக் குகைக்குள்ளே போனவுடனே நாகம் சிறிற்று; அத்தருணத்தில் அந்தக் குகைக்குள்ளே பளபளவென்று ஒரு ஒளி உண்டாயிற்று. அந்த ஒளிக்குப் பின்னால் ஜோசியக்கிழவி கழுத்திலே நாகத்தைச் சுற்றிக்கொண்டு வெகு பயங்கரமாக நின்றாள். அவளைப்பார்த்து மோகனம் மனஞ்சலியாமலே தைரியமாயிருந்தாள். அவளைப்பார்த்து அந்தக் கிழவி, பெண்ணே, உன் அதிர்ஷ்டத்தைத் தெய்வவாக்குவந்து சொல்லுகிறதுகேள்: நீ கன்னிகையாகவேயிருக்கமாட்டாய்; சீக்கிரமே கலியாணமாகும், நீ மேலான கவுரவம் பெற்றுவாழ்வாய்; குழந்தாய், மொகலாயராஜன் அரண்மனைக்குப்போ; நல்லபாக்கியம் உண்டாகும்; இல்லாவிட்டால் இங்கே

பள்ளர்களோடுகூடவேதான் காலங்கழிக்கவேண்டும்; உன் அதிர்ஷ்டத்தைக் கண்டாயிற்று; புறப்பட்டுப்போவென்றுள். உடனே அங்கிருந்த ஒளி மழுங்கிப்போயிற்று. மோகனமும் அந்தக் குகையை விட்டு விடுபோய்ச் சேர்ந்தாள். அந்த ஜோசியம் நேராய்க் கடவுளேவந்து சொன்னதாக எண்ணி உடம்பு பூரித்து அவள் அன்று முதல் அதையே சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க ஒருநாள் மோகனம் தகப்பனைப்பார்த்து, ஐயா, மொகலாய ராஜதானியைப் பார்க்கவேண்டுமென்று எனக்கு மிக்க ஆவலாயிருக்கிறது. ஏனென்கிறீரோ? மகம்மதியர்களுக்கு உயர்ந்த ஜாதியாரிடத்திலேயே பகை அதிகம். அவர்கள் பள்ளரை அவ்வளவாய்ப் பகைப்பதில்லை; நமது செல்வத்தினுலாவது நமக்கு அங்கே கொஞ்சம் மரியாதை கிடைக்காதா? போய்வரலாமென்றுள்.

அதைக்கேட்டு அவன் அப்படியே ஆகட்டும்; அதற்கு யாதொரு தடையுமில்லை; மேலும் நான் முன்னொருகாலத்தில் மொகலாய ராஜாவினுடைய உயிரைக் காப்பாற்றியிருக்கிறேன்; அப்போது அவர் கொடுத்த பெருங்கொடையினுலேதான் நமக்கு இந்த ஐசுவரியமெல்லாம் உண்டானது. அந்த ராஜா கொஞ்சகாலம் தேசாந்தரங்களிலே திரிந்துகொண்டிருந்து சிறிதுகாலமாய்ச் சிங்காசனம்பெற்று வெகு நீதியாய் ராஜ்யபரிபாலனம் பண்ணிவருகிறுர்; நாம் இப்போது அவரைப் போய்ப்பார்ப்பது நல்லதுதான்; ஒருவேளை முன் ஞாபகம்வந்து நம்மை அவர் விசேஷமாய் ஆதரித்தாலும் ஆதரிப்பார்; நன்மை உண்டானமட்டும் உண்டாகட்டும்; போவோம் வா என்றுன்.

அப்படியே அவர்களெல்லாரும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு டில்லிபட்டணம் போய்ச்சேர்ந்தார்கள். அவ்விடம் போய்ச்சேர்ந்த சிலநாளில் மோகனம் என்கிற பெண்ணினுடைய அழகும் சாமர்த்தியமும் கொஞ்சங்கொஞ்சமாய் அப்பட்டணத்தில் பிரசித்தியாகத் தலைப்பட்டது. மகம்மதியர்போலப் பள்ளர் வீட்டுக்குள்ளேயே மூடிக்கொண்டிருக்கிறவர்களல்லராதலால், அந்தப் பெண் கடைகாட்சி முதலிய இடங்களுக்குப்போவாள்; அங்கங்கே அவளைப் பலபேரும் பார்ப்பார்கள். அவளைப் பார்த்தவர்களுள் அவளுடைய சவுந்தரியத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர் ஒருவருமில்லை.

அப்படியிருக்க ஒருநாள் காலையில் மோகனம் கடைத்தெருவு வழியாகப்போனுள். அப்போது அங்கே கூட்டம் அதிகமாய்க் கூடியிருந்ததனுல் அந்தக் கும்பலின் நடுவே போகிறபோது ஒரு பல்லக்குக் கணைபட்டு அவள் கீழேவிழ்ந்தாள். அதைக்கண்டு அண்டையிலிருந்த ஜனங்கள் கூவின கூச்சலைக்கேட்டு அந்தப் பல்லக்குக்குள் இருந்த மனிதன் சரேலென்று பல்லக்கை விட்டிறங்கி

அந்தப் பெண்ணைப்பார்த்து அவளை எடுத்துப் பல்லக்கில் விட்டுக்கொண்டு அவள் வீட்டுக்குப் பல்லக்கைக் கொண்டுபோகச் சொல்லித் தான் பல்லக்கைப் பிடித்துக்கொண்டு காலாலேயே நடந்துபோனான்.

தான் ஒருநாளும் பாராத ஆடம்பரங்களோடுகூடப் பல்லக்கு ஒன்று தன் வீட்டுவாயிலில் நுழையக்கண்டு மோகனத்தின் தந்தையான பள்ளன் இதென்னவென்று பிரமித்து, தனக்கு ஏதோ அபாயம் வந்துவிட்டதென்றெண்ணி வெளியே ஓடப்பார்த்தான். தன் பெண்ணை அந்தப் பல்லக்கில் அடைத்திருக்கப்பார்க்கவே துக்கம் அதிகரித்து கோவென்று கதற ஆரம்பித்தான். அதுகண்டு அந்தப் பெண் சீக்கிரம் பல்லக்கைவிட்டிறங்கித் தகப்பனைச் சமாதானப் படுத்தி நடந்த வர்த்தமானத்தைச்சொல்லி அவனைக் களிக்கச்செய்தாள். அதைக்கேட்டுப் பள்ளன் அந்த மனிதனை உபசரிக்க, அவனும் அவ்வேளை அவர்களோடு அவ்வீட்டிலேயே சுகமாயிருந்து அங்கேயே போஜனமும்பண்ணினான். அதுகண்டு, இதென்ன! பள்ளன்வீட்டில் இந்தப் பிரபு போஜனம்பண்ணினதென்று யாவரும் ஆச்சரியப்பட்டார்கள். பின்பு அவன் நான் அடிக்கடி இங்கேவந்து உங்களைக் கண்டுகொள்ளுகிறேனென்று சொல்லிவிட்டு வீட்டுக்குப்போனான்.

இவ்வளவு காரியஞ்செய்த மனிதன் உமாயூனுடைய மந்திரியான பிராம்கான் என்பவனுடைய மகன்; அரண்மனையிலுள்ள அழகிய ராஜஸ்திரீகள் எத்தனையோபேர் தன்மேல் ஆசைகொண்டிருக்க அவர்களையெல்லாம்விட்டு மோகனத்தைப் பார்க்கும்போதே அவன் அவளிடத்தில் ஆசைகொண்டான். வேண்டாமென்று யாவரையும் கழித்த மோகனமும் அவனைப் பார்த்தபோதே இவன்தான் நம்முடைய நாயகனென்று எண்ணினாள்.

(இன்னும் வரும்.)

நாற்கால் ஜந்துக்களின் உருவமும் நடக்கையும்.

இப்பூமண்டலத்திலுள்ள பலவகைப்பட்ட பிராணிகளையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்தால், நாற்கால்ஜந்துக்கள் நமக்கு இரண்டாந்தரமான பிராணிகளாய்ச் சொல்லத்தக்கவையென்று யாவர்க்கும் நன்றாய்த் தோன்றும். ஆதலால் அவைகளையே முதலில் விசாரிப்போம். நாற்கால் ஜந்துக்களின் உருவமைப்புக்கும் நம்முடைய உருவமைப்புக்கும் உள்ள வேற்றுமையையும், மற்ற பிராணிகளைவிட அவைகளுக்கு விசேஷமாய்க் கிடைத்திருக்கின்ற இயற்கை அறிவையும், அவைகள் ஓயாமற்செய்யும் ஊழியத்தை

யும், அல்லது அவை ஒழியாமற்கொண்டிருக்கும் பகையையும் பார்க்கும்போது நமக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவில்லை. அவற்றின் இயற்கையை நாம் உற்றுப்பார்க்கப்பார்க்க, இவைகளைப்போல நமக்கு விசேஷமாய் மனவெழுச்சி உண்டாக்கத்தக்கதும் நாம் பேராவல்கொண்டு பார்க்கத்தக்கதுமான பிராணி வேறொன்றுமில்லையென நன்ருய்த் தோன்றும். நாற்கால் ஜந்துக்கள் இப்போது வெகுவாய்க் கீழ்ப்படுத்தப்பட்டிருந்தாலும், முதலில் ஒருவாறு நமக்குச் சரியாகவேயிருந்து இப்பூமியின் உரிமைக்காகவும் பாடுபட்டுக்கொண்டு இருந்திருக்கும். முழுதும் மிருகத்தன்மையுடையவர்களான மனிதர்கூடக் காடுகளை நன்ருய்ச் சீர்ப்படுத்த அசமர்த்தர்களாய் இருக்கிருர்கள். காட்டுமிருகங்களோ, ஆயுதம்முதலிய போர்க்கருவி இருப்பிடம் முதலியவை ஒன்றுமில்லாமலிருக்கையிலும், ஒருவராலும் ஜயிப்பதற்கு அசாத்தியமானவைகளாயிருக்கின்றன. சூரர்கள் அநேகமாய் விருத்தியாகிக் கொடிய மிருகங்களைப் பலவாய் அடக்கமுயன்றும் இப்பூமியில் இன்னும் அநேகம் பாகங்களை நாற்கால் ஜந்துக்களே ஆண்டுவருகின்றன.

நாலுகால் ஜந்துக்களுள் அநேகம் மனிதர்களோடு பகைமை பாராட்டுவதைவிட்டு இப்போது அவர்களுக்கு உதவியாயிருக்கின்றன. எவ்வளவு கடினமான வேலைகள் செய்யவேண்டுமென்ருலும் அவை எல்லாவற்றையும் பொறுமையாய்ச் செய்கின்றன. அவை செய்யும் வேலைக்கு நாம் எவ்வளவு கொஞ்சமாய்க் கூலி கொடுத்தாலும் அதைப் பொறுமையோடு பெற்றுக்கொண்டு, நாம் காலாலிட்டவேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிற பிராணி இவைகளைவிட வேறுண்டோ? ஆயினும் அந்தப் பிராணிகளுக்கு இயற்கையாய்ச் சுதந்திரஜீவனத்தில் இருக்கும் விநோதத்தைமாற்றி அவைகளை ஒருவர்க்கு அடங்கினவையாகச் செய்தது கொஞ்சத்தில் முடிந்திராது. ஏனெனில், காட்டுமிருகங்களுக்குச் சுபாவத்திலேயே உண்டான கொடுமை கொஞ்சத்தில் மாறுவதில்லை. அந்த மிருகங்கள் நமக்குச் சுவாதீனமானபிறகுகூட அந்தக் கொடுமை மட்டும் அநேகம் தலைமுறைவரையில் தொடர்ந்துவரக் காண்கிறோம். எப்போதோ ஒருகாலத்தில் காட்டுமிருகங்களாயிருந்த நாய் பூனை முதலியவை தங்களுடைய கொடுமையை இன்னும் தங்கள் குட்டிகளுக்குக் கற்பித்துக்கொடுக்கின்றன. அந்தக் கொடுமை அவைகளால் அநேகமாய் அடக்கப்பட்டிருந்தாலும், திடீரென்று ஒவ்வொரு தருணத்தில் வெளிக்கிளம்பக் காண்கிறோமல்லவா? இப்படிப்பட்ட கொடிய மிருகங்களை அடக்குவதற்காக மனிதர்கள் கொள்ளும் ஜாக்கிரதையினுல், அவைகளுடைய குணம்மாத்திரமே மாறுவதில்லை; உருவங்கூட அநேகமாய் மாறிப் போகின்றது.

நாலுகால்ஜந்துக்களுடைய மேலுருவத்தை நாம் பொதுவாகப்பார்த்தால், சகலமான பிராணிகளுள்ளும் அவை மனிதர்களோடு அநேகமாய் ஒத்திருக்கின்றனவென்று நன்றாய்க் காணலாம். அந்த மிருகங்களைப் பின்னங்கால் இரண்டினாலேமாத்திரம் நிற்கவைத்து அப்படியே நடக்கப்பழக்கினால், அந்த ஒற்றுமை இன்னும் நெருங்கியதாய்த் தோன்றும். அப்படி நிற்கவைத்துப் பார்த்தால் அவையும் விகாரவடிவமுள்ள ஒருவகை மனிதனாகத் தோன்றுமேயொழிய வேறாய்த் தோன்றாது. ஒருவகை வாலில்லாக்குரங்கைப் பார்த்தால் இன்னும் விநோதமாயிருக்கும். அதைக் கண்டுதான் அவயவ சோதக சாஸ்திரிகள், மிருகங்களுடைய சரீரத்தைவிட மனிதருடைய சரீரத்திலுள்ள சிறப்பு இன்னதென்று சொல்லமாட்டாமற்போனார்கள்.

சரீரத்தின் மேற்புறத்தின் அமைப்பு அப்படி இருக்கட்டும்; உட்புறத்தின் அமைப்பை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்ப்போமானால், அவைகளுக்கும் நமக்கும் இருக்கிற பாத்தியதை இன்னும் நெருங்கியிருக்கிறதென்று நன்றாய்த் தோன்றும்; மற்ற அற்பப்பிராணிகளுக்கெல்லாம் கிடைக்காத பல உரிமைகளை அவை நம்மைப்போலவே அநுபவிக்கின்றன வென்பதையும் நாம் காணலாம். குட்டிகளை உயிரோடு பெறுவதினால், அவை நம்மைப்போலவே பறவைகளுக்கு மேலானவையாயிருக்கின்றன; சுவாஸாசயங்களின் மூலமாய் மூச்சுவிடுவதனால், அவை நம்மைப்போலவே ஜலஜந்துக்களுக்கு மேலானவையாயிருக்கின்றன; ரத்தநாடிகளின் மூலமாய்ச் சிவந்தரத்தம் சரீரத்தில் பாவும் இயற்கை உடையவையாயிருப்பதனால், நம்மைப்போலவே பூச்சி புழு முதலியவைகளுக்கு மேலானவையாயிருக்கின்றன. பலவாறு சொல்வியென்ன? கடைசியாய், கொஞ்சமோ முழுவதுமோ, சரீரமெல்லாம் மயிரால் மூடப்பட்டிருப்பதனால், நம்மைப்போலவே அவை பலவிதமான பிராணிகளுக்கும் மேலானவையாயிருக்கின்றன. இப்படியாக இந்த மிருகங்கள் நம்மைப் பலவாறு ஒத்திருக்கின்றன. இவைகளையெல்லாம் பார்த்தால், நமக்கு மானிடவடிவம் வந்ததே என்பதைமாத்திரம் குறித்து நாம் பெருமை பாராட்டுவதற்குக் காரணம் சிறிதளவாவது உண்டென்று தோன்றுகிறதா? அதற்காக நாம் பெருமைப்பட்டால் நம்மைப்போல நாலுகால்ஜந்துக்களும் பெருமைப்படவேண்டுவதுதானே.

நாலுகால்ஜந்துக்களுக்கும் நமக்கும் இருக்கிற ஒற்றுமை இவ்வளவுமாத்திரமேயல்ல; மற்றப் பிராணிகளைப்போல் அவை அந்தந்த சீதோஷ்ணநிலைக்கும் உணவுக்கும் ஏற்றபடி உருமாறாமல், நம்மைப்போலவே என்றும் ஒரு சீராய் இருக்கின்றன. பக்ஷிகளுக்கு உருவம் நிறம் எல்லாம் அந்தந்த நிலைமைக்குத்தக்கபடி

மாறிப்போகின்றன; மீன்களுக்கோ இன்னும் அதிகம்; பூச்சி புழுக ளோ அந்தந்தக்ஷணத்திலே அந்தந்த நிலைக்கு ஏற்றபடி மாறுகின் றன. விருக்ஷவகைகளைப் பார்த்தாலோ, அவைகளுள் இந்த மாறுதல் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. பிராணிகளுடைய வடி வத்தை, நாம் வேண்டும்போது கட்டிக்கொள்ளவும் வேண்டாத போது அவிழ்த்துப்போடவும் ஏற்றதான, நம்முடைய வஸ்திரத் திற்கு ஒப்பாகச்சொல்லலாம். மனிதர்களிடத்தில் அந்த உடுப்பு விசேஷமாய் மாருமலிருக்கிறது; நாற்கால் ஜந்துக்களில் கொஞ்சம் மாறுதல் உண்டு. அந்தஸ்து குறையக்குறைய இந்த மாறுதலும் அதிகமாகின்றது.

நாலுகால்ஜந்துக்களுக்கு இவ்விதமான வேற்றுமைக்குறிப்பு கள் இருந்தாலும், வெவ்வால், முள்ளம்பன்றி, உடும்பு முதலிய சில ஜந்துக்கள் இன்னவகுப்பிற் சேர்ந்தவையென்று தெளிவாய்ச் சொல்லக்கூடியவையாயிருக்கவில்லை. வெவ்வால் பக்ஷிவர்க்கத் திற் சேர்ந்ததென்று சிலர் சொல்லுகிருர்கள். முள்ளம்பன்றியும் இறகுகள்போன்ற முட்களுடையதாயிருப்பதால் அதுவும் பக்ஷி வகையிற் சேரலாமென்று தோன்றுகிறது. உடும்பு மாரால் நகர்ந்து ஊர்வதனுல் ஊர்வனவற்றுள் சேர்ந்ததுபோலக் காண்கிறது. இப் படி இந்த வர்க்கத்திற் சேர்ந்தவையென்று சொல்லக்கூடாத சில ஜந்துக்களும் உண்டு.

நாலுகால்ஜந்துக்கள் உலகத்தில் பலவிதமாயிருந்தாலும் அதது அததின் நிலைமைக்கேற்றபடியே அமைக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு விகாரமான உருவமைப்புள்ள பிராணியாயிருந்தாலும், அததின் இயற்கைக்கு ஏற்றபடி சுகமனுபவிக்கத்தக்கதாய் உரு வமைக்கப்படாத ஜந்து ஒன்றுகூடக் கிடையாது. அவைகளுக் குள்ள குறைவுகள் நமக்கும் உண்டு. சுகமோ அவைகளுக்கே அதிகமாயிருக்கின்றது. நாலுகால் ஜந்துக்களாகட்டும், இன்னும் அற்பஜந்துக்களாகட்டும், அவைகளுக்கெல்லாம் ஏதாவது ஒரு துன்பம் உண்டாகும்போது வருத்தமேயொழிய மற்றப்போது இல்லை. அப்படித் துன்பங்கள் உண்டாவதே அருமை; உண்டா னுலும் அது அற்பகாலந்தான் நிற்கப்போகிறது. மனிதர்களுக் கோ மனவருத்தமுண்டாக இரண்டு வழியுண்டு. என்றைக்கோ சங்கடமுண்டாகப்போகிறதென்பதை நினைத்து இப்போதே துன் பப்படுவதொன்று; அதை அனுபவிக்கும்போது வருந்துவதொன்று. ஆதலால் மனிதர்களுடைய அனுபவங்களெல்லாம் அந்தந்த ஜன் மத்தோடேயே ஒழிந்துபோகின்றனவென்று சொல்வோமானுல், அப்போது மனிதஜன்மத்தைப்போலக் கேடுகெட்ட ஜன்மம் வேருென்றுமில்லையென்று சொல்ல நாம் துணிகிறேம்.

நாலுகால்ஜந்துக்களுடைய முகம் வெவ்வேறுவிதமாய் அமைக் கப்பட்டிருந்தாலும், அதது பிழைக்கிறவழிக்கு ஏற்றபடியே

அமைக்கப்பட்டிருக்கின்றது. சிலவற்றிற்குக் கூராயிருக்கின்றது; அதனால் தரையிலிருக்கும் இரையைப் பெயர்த்தெடுத்துத் தின்ன அவைகளுக்குச் சுலபமாகின்றது. நாய்முதலிய சில ஜந்துக்குத் தலை நீளமாயிருக்கின்றது. அதனால் கிராணேந்திய நரம்புகளுக்கு விசேஷமாய் இடம் உண்டாவதால், வாதனைபிடித்து இரையைப் பிடித்துக்கொள்ள அவைகளுக்குச் சுலபமாகின்றது.

சிங்கம்முதலிய ஜந்துக்களுக்குத் தலை குட்டையாய் உரத்திருக்கின்றது. அதனால் அவற்றின் தாடைகளுக்கு அதிக வலிமை உண்டாகிச் சண்டைபோட மிகவும் அனுகூலமாகின்றது. புல் மேய்கிற நாலுகால்ஜந்துக்களுக்கோ, இலேசாய்க் குனிந்து புல் மேயவும் நிமிரவும் அனுகூலமாய், முதுகெலும்போடு சேர்ந்த ஒரு பெரிய கழுத்தெலும்பில் தலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அந்த ஜந்துக்கள் தலையை எந்நேரம் நிமிர்த்திவைத்துக் கொண்டிருந்தாலும் கவிழ்த்து வைத்துக்கொண்டிருந்தாலும் அவைகளுக்கு யாதொரு வருத்தமும் தோன்றுவதில்லை.

பிராணிகளுடைய பற்களைப்பார்த்தாலோ, அதது உண்கிற உணவுக்கு ஏற்றவகையாகவே அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாம்ஸம் புஜிக்கிற பிராணிகளுடைய பற்களுக்கும், தானிய வகைகளைப் புசிக்கிற பிராணிகளுடைய பற்களுக்கும் அதிக வேற்றுமை உண்டு. தானியவகைகளைத் தின்கிற பிராணிகளுடைய பற்கள், முன்வாயில் இரையைக் கடிப்பதற்கு உபயோகமாய்க் கருக்காகவும், கடைவாயில் அதை மென்று பொடிசெய்வதற்கு உபயோகமாய்த் தட்டையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனாலேயே மனிதர்கள் மாம்ஸம் புஜிப்பதற்காகப் படைக்கப் பட்டவரல்லரென்று நன்றாய்த் தோன்றும். மாம்ஸம் தின்பவைகளுடைய பற்களோ நுனியின் ஈட்டிபோல் வெகு கூராய் ஒரு பொருளைக் கவ்விக்கொள்வதற்கே உபயோகமாயிருக்கின்றன. தானியவகைகளைத் தின்கிற பற்களை எந்திரத்திற்கொப்பென்றும், மாம்ஸம் தின்கிற பற்களை ஈட்டிக்கொப்பென்றும் சொல்லலாம். எல்லாப் பிராணிகளுக்கும் பற்களுடைய மேற்புறம்மட்டும் ஓர் அளவாய் இருப்பதில்லை; வாயை மூடும்போது மேல்வாய்ப்பல்லும் கீழ்வாய்ப்பல்லும் நன்றாய்ப் பொருந்தும்படி இடை இடையே அதற்கு வேண்டிய சந்துகளும் சாய்வுகளுமாயிருக்கின்றன. அப்படி மேடும்பள்ளமாயிருப்பதால் இரையைப் பொடிபண்ணுவதற்கு மிகவும் அனுகூலமாகின்றன. வயதாக வயதாக அவ்விடமெல்லாம் வெழுமூண்டுபோகின்றன. அதனாலேதான் நல்ல வயதுள்ள பிராணிகளைவிடக் கிழங்களுக்குத் தின்ன அதிக நாழிகை செல்லுகின்றது.

அவைகளுடைய கால்களும் பற்களைப்போலவே அததின் சவுக்கியத்திற்கு ஏற்றபடியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சில

ஜந்துக்களின் கால்கள் இஷ்டப்படி எளிதாய் உபயோகித்துக்
கொள்வதற்கில்லாமல் அவற்றின் பருத்ததேகத்தைத் தாங்குவ
தற்காகவே வலிமையாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. யானை
காட்டானை முதலியவற்றின் கால்கள் இப்படிப்பட்டவையே.
அவை மெல்லியவையாயிருக்குமாயின் அதன் பருத்த சரீரத்தைத்
தாங்கமாட்டாமற்போம். வேகமாயோடுவதற்கு ஏற்றதாக இலே
சாயிருக்குமாயின், அவை இதரஜந்துக்களை இரைக்காக ஓடித் துர
த்திப்பிடிக்க வேண்டுவதில்லையாதலாலும், அதிக பலசாலிகளாத
லால் ஒன்றுக்குப் பயந்தோடவேண்டுவதில்லை ஆதலாலும் அது
உபயோகமற்றதாய்விடும். முசல் மான் முதலியவை ஓடி ஒளித்
துக்கொள்ளவேண்டியவையாதலின், அவற்றின் கால் வேகமாய்
ஓடுவதற்கென்றே மெல்லியவையாய்ச் சுறுசுறுப்புடன் நரம்புக
ளாற் செய்யப்பட்டிருக்கின்றது. இல்லாவிட்டால் அவை மாம்ஸ
பக்ஷிகளுக்கு இரையாகி வெகு சீக்கிரத்தில் அந்த ஜாதியே
நிர்மூலமாய்ப் போம். இப்போது உலகத்தில் கொடுமைசெய்வத
ற்கு இருப்பதைவிடப் பத்திரந்தேடிக்கொள்வதற்கு இருக்கிறவழி
களே அதிகம். ஒரு பிராணி மற்றொருபிராணியைப் பிடிக்கவேண்
டுமானால் சுலபத்தில் ஆவதில்லை. பொறுத்து விடாமுயற்சியாய்ப்
பிரயாசப்பட்டால்தான் ஒருவேளை முடியும். ஜலஜந்துக்களையே
தின்கிற பிராணிகளுடைய கால்கள் விரல்களெல்லாம் மெல்லிய
தசையால் மூடப்பட்டு நீந்துவதற்சேற்றவையாய் அமைக்கப்பட்
டிருக்கின்றன. கொடுமைசெய்து இதரஜந்துக்களையே கொன்று
ஜீவிப்பவைகளுடைய கால்கள் வாளாயுதம்போன்ற நகங்களோடு
கூடியிருக்கின்றன. சாந்தமாய் ஜீவிக்கிற ஜந்துக்களுடைய கால்
களோ ஒவ்வொருவேளை தங்களைக் காத்துக்கொள்வதற்கேற்ற
குளம்புகள் உள்ளவையாயிருக்கின்றன. அதனால் அவை வெகு
தூரம் காடுமேடுகளில் சுலபமாய் யாத்திரைசெய்ய வல்லமை
யுடையவையாயிருக்கின்றன.

இரைப்பையோ சாதாரணமாய் அந்தந்த ஜீவன் உட்கொள்ளு
கிற உணவின்தன்மைக்கும், அந்த உணவுகிடைக்கிற விதத்திற்
கும் ஏற்றதாயிருக்கிறது. மாம்ஸம் முதலான அதிக புஷ்டிதரத்
தக்க உணவுகளை உண்கிற பிராணிகளுக்கு இரைப்பை சிறிதா
யும், அதில் விழுகிற உணவை ஜரிப்பிக்கத்தக்க ஒருவித நீரை
உண்டாக்குவதாயுமிருக்கிறது. அவற்றின் குடல்களும் குட்டை
யாயும் கொழுப்பற்றவையாயும் இருக்கும். காய் கிழங்குகளைப்
புசிப்பவைகளுடைய இரைப்பையோ பெரியதாயிருக்கும். அசை
போடுகிற ஜந்துக்களுக்கு இரைப்பைகள் நான்குக்குக் குறை
யாமலிருக்கும். அதனாலேதான் அவற்றின் மட்டியுணவுகள் அந்
தந்த இரைப்பையில் நன்றாய்ச் சேர்ப்பட்டுக் கடைசியில் ஜீரண
மாகின்றன. இத்தேசத்தைவிடப் புல்பூண்டுகள் அதிக புஷ்டி

ளையக் கொடுக்கிற ஆப்ரிக்காதேசத்திலே, இங்கே நான்கு இரைப்பை உள்ள பிராணிகளுக்குக்கூட இரண்டேயிருக்கின்றனவாம். எந்தப் பிராணியானாலும் சரி, குடல்மட்டும் அதனின் உணவுக்கேற்றபடியே இருக்கின்றது. எவைகளுக்குக் குடல்நீளமோ, அவைகளுக்கு இரைப்பையும் பெரிது; தீனியும் அதிகம் கொள்ளும்; அப்பப்போது அகப்பட்டதைத் தின்கிற காட்டுமிருகங்களுக்கு இரைப்பையும் சிறிது; குடலும் கொஞ்சமே. இப்படிக் கால்நடைகளெல்லாம் கொஞ்சமேறக்குறைய மனிதர்களை ஒத்திருப்பதனால், அவைகளை நாம் பக்ஷமாய்ப் பாராட்டாமல் அவற்றினிடத்தில் கொடுமைகாட்டக் காரணமுண்டோ?

மிராண்டா என்பவள் கதை.

அநேக வருஷங்களுக்குமுன்னே பிராஸ்பிரோ என்று ஒருவன் மிலான் நகரத்திற்கு அரசனாயிருந்தான். அவன் வெகு சமர்த்தன்; படிப்பிலேயே மிக்க விருப்பமுடையவனாய் மற்றெதையும் வெகுவாய் அலக்ஷியஞ் செய்திருந்தான். ராஜகாரியங்களையெல்லாம் தன் சகோதரனான அந்தோனியோ என்பவன் வசத்தில் ஒப்பிவித்துவிட்டுப் புத்தகமுங் கையுமாயிருப்பதே வேலையாயிருந்தான். ஒவ்வொருவேளையில், மற்றெவரும்வந்து எட்டிப்பாராத தனிப்புறமான ஒரு இடத்திற்சென்று அங்கேயே தன் இஷ்டப்படிப் படிப்பதும் விஷயங்களை ஆலோசிப்பதுமாய் இருப்பான்.

பிராஸ்பிரோவுக்கு மிராண்டா என்று ஒரு பெண்குழந்தையுண்டு. அந்தக் குழந்தையைப் பெற்றவுடனே தாய் இறந்துபோனாள். ஆயினும் நாலைந்து தாதிமார்கள் அந்தப் பெண்ணைப் பால்கொடுத்து வளர்த்துவந்தார்கள். ஆதலின் அந்தக் குழந்தை தாயில்லாத துக்கமே தெரியாமல் அவர்களையே தாயாகப் பாவித்துச் சுகமாய் வளர்ந்தது.

பிராஸ்பிரோ வேறு வேலையைவிட்டுப் படிப்பே காரியமாய் இருந்துகொண்டிருக்கையில், அந்தோனியோ தானே அத்தேசத்திற்குச் சுதந்திர ராஜாவாகிவிடவேண்டுமென்று எண்ணங்கொண்டு அதற்குவேண்டிய தந்திரம் செய்யத்தொடங்கினான். சிலநாளையில் மகா வஞ்சகனான அந்தோனியோ நேபில்ஸ்நகரத்தரசனோடு நேசம்பாராட்டி, தன் சகோதரனைத் தள்ளிவிட்டுத் தானே தன் தேசத்திற்கு ராஜாவாவதற்கு அவன் தனக்குத் துணைசெய்கிற பக்ஷத்தில், அவனுக்குத் தான் வருஷந்தோறும் கப்பங்கட்டிக் கொண்டுவருவதாய்ச் சொல்லி அவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான்.

நேபில்ஸ்நகரத்தரசனும் பிராஸ்பிரோவுக்குப் பெரும்பகை யாளியாயிருக்கவே, அந்தோனியோவின் மோசத்தைச் சந்தோஷமாய் அங்கிசரித்து அவனுக்குச் சகாயமாகப் பெருஞ்சேனை அனுப்பினான். பாதிராத்திரியில் அந்தோனியோ தன் பட்டணத்துக் கோட்டைவாயிலைத்திறந்து நேபில்ஸ்நகரத்தரசன் அனுப்பிய சேனைக்கு வழிவிட, அந்தச் சேனைத்தலைவர் சிலர் உடனே உள்ளே புகுந்து பிராஸ்பிரோவின் வீட்டிற்சென்று அவனைச் சிறையாய்ப்பிடித்து, தொட்டிலில் படுத்துத்தூங்கின குழந்தையையும் அழ அழப் பிடித்திழுத்துக்கொண்டு கப்பல்துறை கொண்டுசேர்த்து, அங்கே பாய்மரம் துடுப்பு ஒன்றுமில்லாமல் கிடந்த ஒரு பழையபடகிலே அவ்விருவரையும்போட்டுத் தனியே சமுத்திரத்தில் ஓட்டிவிட்டார்கள். காஞ்சலோ என்கிற நேபில்ஸ்நகரத்துப் பெரியமனிதன் ஒருவன் அவர்களுடைய பரிதாபத்தைப்பார்த்துக் கருணைகூர்ந்து அந்தப் படகில் கொஞ்சம் சோறும், நல்ல தண்ணீரும், உடுப்பும், தன் உயிரைவிடச் சிறந்ததென்று பிராஸ்பிரோ மதித்திருந்த சில புத்தகங்களும் போட்டனுப்பினான்.

அப்போது மிராண்டாவுக்கு மூன்றுவயதுகூட ஆகவில்லை. அந்த இளங்குழந்தையை எப்படிக் காப்பாற்றப்போகிறோமென்று பிராஸ்பிரோ ஏங்கிப்போனான். ஆயினும் அந்தக் குழந்தை அவனுக்கு ஒரு சங்கடமாயிருப்பதுபோக, அவனுடைய மனவருத்தத்தைப்போக்கி அவனுக்குத் தேற்றரவும் களிப்பும் உண்டாக்க ஒரு நல்ல வழியாயிற்று. அது எப்படியென்கிறீர்களோ? அந்தப் பெண் சிரிப்பும் விளையாட்டுமாய் யாவர்க்கும் உற்சாகமுண்டாக்குகிற குழந்தையாயிருந்ததனால், அவர்கள் நடுக்கடலிலே தனியே மிகவும் பயங்கரமான அலைகளிலே படகு கவிழ்ந்து போவதுபோல் ஆடிஆடிக் கொண்டு போகிற சங்கட தசையைக் கண்டு பிராஸ்பிரோவுக்குத் துக்கம் உண்டாகும்போதெல்லாம், அந்தக் குழந்தையின் சிரிப்பும் விளையாட்டும் அவனுக்குச் சந்தோஷம் உண்டாகச்செய்தது. அந்தக் குழந்தையின் சிரிப்பைப் பார்க்கும்போதெல்லாம், இன்னும் கடவுள் கிருபைசெய்து நம்மைக் காத்துவருகிறார் என்கிற எண்ணம் அவன் மனதில் உண்டாகும். அவன் படித்த படிப்புகூட அவனுக்கு அந்த ஞானத்தை உண்டுபண்ணினதில்லை. இதைப்பற்றியே அவன் பின் ஒருகாலத்தில் அந்தப் பெண்ணையே பார்த்து நீ என்னைக் காப்பாற்றின தெய்வப்பெண்ணல்லவா என்று சொல்லும்படியாயிற்று. இப்படிப் போம்போது கடைசியாய் அந்தப் படகு ஏதோ ஒரு தீவண்டைபோய்க் கரைசேர்ந்தது. வெகுநாளைக்குமுன்னே அந்தத் தீவிலே ஒரு மாயக்காரி இருந்ததாகவும், பிராஸ்பிரோ அங்கே சென்றபோது அவள் இறந்து போனதாகவும் சொல்லுகிறார்கள். அவன் போனபோது அந்தத் தீவில் இருந்தவன் அவளுடைய மகன் ஒருவனே. அவனுக்குக்

காலிபன் என்றுபெயர். ராக்ஷசத்தன்மையும் மிருகத்தன்மையுமே அவனிடத்தில் அதிகமாய் அவன் வெகுவாக ராக்ஷதனென்றே சொல்லத்தக்கவனுயிருந்தான். மேலும் அங்கே ஏரியல் என்று ஒரு பிசாசு உண்டு. அந்தப் பிசாசை அவ்விடத்திலிருந்த மாயக்காரி ஒரு புளியமரப்பொந்தில் அடைத்துவைத்திருந்தாள். பிராஸ்பிரோ தன் சாமர்த்தியத்தால் அதைத் தெரிந்துகொண்டு அந்தப் பிசாசத்தைச் சிறைநீக்கிவிட்டான். அந்தப் பிசாசு வெகு சாமர்த்தியமுள்ளது. தனக்கு வேண்டியபடியெல்லாம் உருவமெடுத்துக்கொள்ளும்; நன்றாய்ப் பாட்டுபாடும்; கவிகள் கட்டும்; இவ்வுலகத்திலுள்ள விசித்திரமான பொருள்களும், அவற்றுள் நடக்கும் அற்புதமான மாறுபாடுகளும் அதற்கு நன்றாய்த் தெரியும்; வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தோடும்; வெவ்வால்களின் முதுகின்மேல் ஏறிக்கொண்டு சவாரிசெய்யும்; இப்படி அது பலவித விசித்திர சக்தியுடையதாயிருந்தது.

ஏரியல் என்னும் பிசாசு தன்னைச் சிறையிலிருந்து விடுவித்ததற்காகப் பிராஸ்பிரோவினிடத்தில் அதிக நன்றியுள்ளதாய், அவனிடத்தில் மிகவும் பிரீதிப்பாராட்டித் தன்னால் கூடியவளவு அவனுக்கு உண்மையாக உழைக்க ஆரம்பித்தது. பிராஸ்பிரோ காலிபன் என்னும் ராக்ஷதனைக்கூடத் தனக்குச் சேவகனுகவே வைத்துக்கொண்டிருந்தான். ஆயினும் ஏரியல் என்னும் பிசாசைப்போல அந்த ராக்ஷதனை நல்லதனத்தில் ஆளக்கூடவில்லை. அதட்டும் வெருட்டுமாயே அவனை அடக்கி ஆண்டுவந்தான்.

அந்தத் தீவிலே மிராண்டா என்கிற பெண் தன் தகப்பனும் பிசாசும் ராக்ஷதனும்தவிர மற்றெவருமில்லாமல் அவர்களுடைய சம்ரக்ஷணையிலேயே வளர்ந்துவந்தாள். அவசியமாய்த் தெரியவேண்டிய விஷயங்களெல்லாவற்றையும் பிராஸ்பிரோ அந்தப் பெண்ணுக்குக் கற்பித்துவந்தான். அந்தப் பெண் நல்லபுத்தியும் சாமர்த்தியமும் உடையவளாயிருந்ததனுல், மற்றவர்கள் வெகு நாள் வெகு வருத்தப்பட்டுப் பாடசாலைகளில் படித்து எவ்வளவு கற்றுக்கொள்வார்களோ, அவ்வளவுவிஷயங்களை வெகு சீக்கிரத்திலே கற்றுக்கொண்டாள்.

அவர்கள் அந்தத் தீவில் அழகிய ஒரு தோப்பிலே சிறிய குடிசையொன்று கட்டிக்கொண்டு அதிலே வசித்திருந்தார்கள். அந்தத் தோப்பிலே பிராஸ்பிரோ, காஞ்சலோ தன் படகிலே தயைசெய்து எடுத்துப்போட்ட புத்தகங்களைக் கையிலே வைத்துக்கொண்டு, எப்போதும் அவைகளைப் படிப்பதே வேலையாயிருந்தான். அவனுக்கு ஆட்பட்டிருந்த காலிபன் என்னும் ராக்ஷதன் விறகு தண்ணீர் நெருப்புமுதலான பொருள்தேடிச் சோறுசமைப்பது முதலிய பணிவிடை செய்துவந்தான். சிறுகுழந்தைப் பருவத்திலேயே மிராண்டாவினுடைய சிரிப்பும் சமத்காரமும் பிராஸ்

பிரோவுக்கிருந்த துக்கங்களைப்போக்கிச் சந்தோஷமுண்டாக்கிற றென்றால், தக்கவயது வந்தபிறகு அந்தப் பெண்ணுக்கு உண்டான நல்லபுத்தியும், விவேகமும், சாமர்த்தியமும், தகப்பனிடத்தில் அதிக ஆதரவும், அவன் கற்பித்துக்கொடுக்கிற விஷயங்களில் அதிக ஊக்கமும் உற்சாகமுமாகிய இவைகளெல்லாம், பிராஸ்பிரோ இவ்வுலகவாழ்க்கையில் வெறுப்புற்று நிராசையாய் உயிரை இழக்காதபடி அவனைக் காத்தனவென்பதற்கு நாம் ஆச்சரியப்படவேண்டுமோ?

மிராண்டா சுயலாபத்தை விசேஷமாய்க் கருதாமல் எல்லாப் பிராணிகளிடத்திலும் பிரீதியும் பரிதாபமுமாயிருப்பதைப் பார்க்கப்பார்க்க, இவ்வுலகத்தில் மானிடஜன்மம் எடுத்ததற்குப் பயன் எவ்விதத்திலாயினும் அவரவருடைய சுகத்தைத் தேடிக்கொள்வது மாத்திரமே அல்லவென்கிற எண்ணம் பிராஸ்பிரோவின் மனதில் உதித்தது. தன் மனதுக்குமாத்திரமே சந்தோஷமுண்டாக்குகிற தன் படிப்பைவிட உலகத்திற்கெல்லாம் உபயோகமான மிராண்டாவின் பூததயை பச்சாத்தாபம் முதலிய குணங்கள் மிகவும் சிறந்தவையென்கிற எண்ணங்கூட அவன் மனதில் உண்டாயிருக்கலாம். படிப்புதவிர பிராஸ்பிரோவின் மனதுக்கு முன்போல ராஜகாரியம் முதலிய வியாபாரம் ஒன்றுமில்லை; அவன் படிப்புக்குத் தடைசெய்வாரும் அவ்விடத்தில் ஒருவருமில்லை. அப்படி அவன் ஓயாமல் படித்தும் அவன் மனதுக்குமட்டும் சந்தோஷம் அதிகமாய் உண்டாகவில்லை. நம்மை அயலார் நேசிக்கவும் அயலாரை நாம் நேசிக்கவும் பலர்கூடி வாழாதவாழ்வு என்னவாழ்வென்று அவனுக்கு மனக்குறையே அதிகமாயிற்று.

இப்படியாக அவர்கள் பனிரண்டு வருஷகாலம் அந்தத் தீவிலே தனியாய் வசித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப்பிறகு அவர்கள் தம்மினத்தாரோடு கூடும்படியான நல்லதருணம் ஒன்று வாய்த்தது. நேபில்ஸ்நகரத்தரசன் தன் மகளான கிளாரிபெல் என்பவளை டியூனிஸ்நகரத்தரசனுக்குக் கலியாணஞ்செய்து கொடுத்தான். நேபில்ஸ்நகரத்தரசன், அவன் பிள்ளைகளான பெர்டிநண்டு சபாஸ்டியன் என்பவர்கள், பிராஸ்பிரோவின் சகோதரனான அந்தோனியோ, காஞ்சலோ, இவர்களெல்லாம் அந்தக் கலியாணத்திற்குப்போய்த் திரும்பிவருகையில், பிராஸ்பிரோவின் தீவண்டை வரும்போது ஒரு புசலடித்து, அவர்கள் ஏறிவந்த கப்பல் ஒரு பெரும்பாறையில் மோத அது பிளந்துபோயிற்று. அத்தருணத்தில் ஏரியல் என்னும் பிசாசு நெருப்புபோல வடிவெடுத்து அந்தக் கப்பலைச் சூழ்ந்துகொண்டு அதைக் கொளுத்த ஆரம்பித்தது. அந்த அபாயத்தைப்பார்த்துப் பிராஸ்பிரோ, தனக்குத் தீங்குசெய்தவர்களுக்கும் நன்மைசெய்கிற சுபாவம் உடையவனாதலால், அவர்கள் எல்லாரையும் பத்திரமாய்க் காப்பாற்

றும்படிப் பிசாசுக்குக் கட்டளையிட, அது அவர்களுள் ஒருவர் கூடத் தப்பாமல் எல்லாரையும் சுகமாய்க் கரைகொண்டுசேர்த்தது.

அந்தக் கப்பல் நடுக்கடலிலே அல்லாடித் தவித்ததைப்பார்த்து மிராண்டா கோவென்று கதறி அழுதுகொண்டு தகப்பனண்டை ஓடிவந்து, ஐயா! அத்தனைபேரும் அநியாயமாய் மாண்டுபோகப் போகிறார்களே! அவர்களைக் காப்பாற்ற வழியொன்றும் இல்லையாவென்றுகேட்க அவன், குழந்தாய்! விசனப்படாதே; அவர்களைக் காப்பாற்றும்படி நான் முன்னமே திட்டஞ்செய்தாயிற்று; கண்ணீரைத் துடைத்துக்கொள் என்றுசொல்லி, தான் பிறந்து வளர்ந்தது, ராஜாவானது, பின்பு தேசத்தினின்றும் துரத்தப்பட்டது முதலிய தன் பூர்வ சரித்திரங்களையெல்லாம் சொன்னான். தான் முன்னே செல்வமும் சீருமாய் வாழ்ந்ததொன்றும் அந்தப் பெண்ணுக்கு நினைவு வரவில்லை; ஆயினும் தன்னைப் பால்கொடுத்து வளர்த்த தாதிகளுடைய ஞாபகமட்டும் மறவாமல் அப்படியே இருந்தது. தன் சகோதரனும் நேபில்ஸ்நகரத்தரசனும் தனக்குச் செய்த பொல்லாங்குகளையெல்லாம் பிராஸ்பிரோ சொல்லக்கேட்டு அந்தப் பெண் ஒருவன் மற்றொருவனுக்கு எப்படிப் பொல்லாங்கு செய்யத் துணிவானென்று பிரமித்துநின்றாள்; அவள் தனக்குப் புத்திதெரிந்த நாள்முதல் தன் தகப்பன்தவிர மற்றெந்த மன்னுயிரையும் பார்த்ததில்லையாதலால், எல்லாரும் தன்னைப்போலவே கபடமற்று ஈவு இரக்கமுடையவர்களாயே இருப்பார்களென்பது அவள் உள்ளுறக்கொண்டிருந்த கொள்கை.

இப்படியிருக்க நேபில்ஸ்நகரத்தரசன் மகனான பெர்டிநாண்டு என்பவன் தனியே அலையினால் ஒரு கரையோரத்தில் ஒதுக்கப்பட்டுத் தன் தகப்பன் முதலானவர்களெல்லாம் கடலிலே மாண்டு போனார்களென்றெண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கக்கண்டு, ஏரியல் அவனுக்கு நேராய் ஆகாயத்திலே போய்நின்று மதுரமாய்ப் பாட, அதைக்கேட்டுப் பெர்டிநாண்டு ஆச்சரியப்பட்டு அதன் ...ழியேபோகப் புறப்பட்டான். அவன் கண்ணுக்குத் தெரியா ...த்திலேயே ஏரியல் அவனுக்கு வழிகாட்டிப் பாடிக் ...டு பிராஸ்பிரோவும் மிராண்டாவும் உட்கார்ந்திருந்த குடிசை ...யண்டை போய்நின்றது.

அந்தப் பிசாசு பாடின மதுரமான பாட்டைக்கேட்கவே பெர்டிநாண்டுக்கு உடனே தகப்பன் நினைவுவந்து விசனம் அதிகமாயிற்று. அப்படிக் கண்ணும் கண்ணீருமாய் அவன் எதிரேவந்து நின்றதைக் கண்டு மிராண்டா இது என்ன பேயோ பிசாசோ என்று நினைத்தாளென்றாலும் அவன் படுகிற சங்கடங்களைப்பார்த்து அவள் மிகவும் பரிதாபப்பட்டாள். அவன் எதிரே வந்துநின்று தான் பட்ட பாடுகளையெல்லாம் சொல்லக்கேட்டு, அவளுக்கு விசனம்

இன்னும் அதிகமாயிற்று. பெர்டினண்டு, நம் இனத்தாரையெல்லாம் இழந்துபோனோம்; இனி நாம் அவர்களைக் காணப்போகிறதில்லையென்று நிராசைகொண்டு, அப்பெண்ணினுடைய நற்குணங்களைக் கண்டு அதிசயித்து அவளிடத்தில் அதிக ஆசைவைத்தான். இந்த ஜாடையைப் பிராஸ்பிரோ குறிப்பாய் அறிந்துகொண்டு, நம்முடைய சகோதரனையும் நேபில்ஸ்நகரத்தரசனையும் சமாதானப் படுத்திக்கொள்ளவேண்டுமென்று தான் கொண்டிருக்கும் எண்ணத்திற்கு இது அனுகூலந்தானென்று, அதனால் மனம் உவந்தான். ஆயினும் பேர்டினண்டு எத்தன்மையான மனிதனோ அதைப் பரீக்ஷித்தறியவேண்டுமென்று, அவன் சொன்னதைத் தான் நம்பாமல் அந்தத் தீவை ஜெயித்துக்கொள்ளவந்திருக்கும் ஒரு தூதனாக நினைத்தவன்போலப் பாவித்து, அவனைத் தனக்கு வேலைக்காரனாகச் செய்துகொண்டான். அவன் ஆண்மை உடையவனானால் வெட்கப்படாமல் பொறுத்து வேலைசெய்வானென்பது அவன் கருத்து. அதனால் காலிபன் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யச்சொல்லி அவனுக்குத் திட்டஞ்செய்தான். அதைக்கண்டு பெர்டினண்டு, உலகத்தில் உழைப்பில்லாமல் எந்தக்காரியந்தான் செய்யக்கூடும்? பிள்ளைகள் விளையாடுகிறார்களே; அது உழைப்பில்லாமல் ஆகின்றதா? பெருத்த லாபத்தைக்கோரிப் பலகாரியங்கள் செய்கிறார்களே; அவையெல்லாம் உழைப்பில்லாமல் உண்டாகிறதா? ஆதலால் உயர்வும் இழிவும் வேலைசெய்கிறவனைப்பற்றியதே ஒழிய வேலையைப்பற்றியதன்று எனத் தன் மனதில்தானே நினைத்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாயே அவன் இட்டவேலைகளைச்செய்ய ஆரம்பித்தான்.

தன் தகப்பன் பெர்டினண்டை அவ்வளவு கொடுமையாய் நடத்துவதைப்பார்த்து மிராண்டாவுக்கு மிகவும் துக்கமுண்டாயிற்று. அவன் படுகிற கஷ்டத்தைப்பார்த்து அவளுக்கு மனம் தாளவில்லை. அதனால் அவன் வேலைசெய்துவிட்டுத் திரும்பி வரும்போது ஒருநாள் அவள் அவனண்டைபோய்க் கொஞ்ச நேரம் இளைப்பாறி இருக்கும்படி வேண்டினாள். அவன் நான் அப்படி ஒருபோதும் செய்யமாட்டேன்; எ[illegible] இட்டிருக்கிற வேலையைப் பொழுதுபோவதற்குள் நான் மு[illegible]துத் தீரவேண்டுமென, அவள்: நீர் சற்றே உட்காரும்; அந்த வேலையை நான் செய்கிறேன் என்று சொல்லக்கேட்டு, அவன்: பெண்ணே! உன்னை வேலைசெய்யவிட்டு நான் சோம்பேறியாய் உட்காந்திருப்பதைவிட உயிரை விடலாமே; ஆனால் உன் பெயரைமட்டும் எனக்குச் சொல், உன் நற்குணத்திற்காக நான் அதைக் காலையிலும் மாலையிலும் எடுத்துரைத்துத் துதிக்கிறேன் என்றான்.

இது இப்படியிருக்க நேபில்ஸ் நகரத்தரசன், அவன் சகோதரனான சபாஸ்டியன், மிலான்நகரத்துத் திருட்டரசனான அந்தோ

னியோ முதலியவர்களெல்லாரும் மற்றேரிடத்தில் கரைசேர்ந்து பெர்டிஞண்டு கடலில் மூழ்கிப்போயினனென்று நிச்சயித்துத் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். அங்கே நேபில்ஸ்நகரத்தரசன் தூங்குகிற தருணம்பார்த்து, நாம் இந்த ராஜாவையும் காஞ்ச லோவையும் பக்குவமாய்க் கொன்றுவிடுவோம்; நீயே நேபில்ஸ் நகரத்துக்கு அரசனுகிவிடலாமென்றுசொல்லி அந்தோனியோ ஸபாஸ்டியனேடு ஒரு துராலோசனைசெய்ய ஆரம்பித்தான். அவர்கள் அந்த எண்ணத்தை நிறைவேற்றப்போகிற தருணத்தில் ஏரியல் என்னும் பிசாசு காஞ்சலோவின் காதண்டைபோய்ப் பாடி அவனை எழுப்பிவிட்டு, அந்தக் கெடுதி நடக்கவொட்டாமல் செய்தது. ஏரியல் செய்தகாரியம் இவ்வளவேயோ? கண்ணுக்குத் தெரியாமலே அந்தக் கொடியவர்களுடைய எதிரிலே போய்நின்று, கொடும்பாவிகளே! நீங்கள் பிராஸ்பிரோவுக்குச்செய்த பொல்லாங்கினுலல்லவோ உங்களுக்கு இப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் நேர்ந்தன! இவ்வளவோடு போகவில்லை, இன்னும் பற்பல கெடுதிகள் உண்டாகக் காத்திருக்கின்றன; உடனே பிராஸ்பிரோவின் காலிலே போய்விழுந்து அவனை மன்னிப்பு கேட்டுக்கொண்டீர்களானுல், இவ்வளவோடு தப்புவீர்கள் என்றது. அதைக்கேட்கவே தாம்செய்த கொடுமைக்காக அவர்களுக்கு மிகவும் அனுதாபமுண்டாயிற்று; நாம் என்ன புத்தியீனமானகாரியஞ் செய்தோமென்று அவர்கள் மனமழிந்தார்கள். ஏரியல் அவர்களை அங்கிருந்து அழைத்துக்கொண்டுபோய்ப் பிராஸ்பிரோவின் தோப்பண்டை சேர்த்தது. பிராஸ்பிரோ அவர்களைப்பார்த்துக் கடலில் மாண்டுபோகாமல் தப்பினுர்களேயென்று சந்தோஷமாய் எல்லாரையும் வரவழைத்தான். கடலுக்கு இரையாய்ப் போகட்டுமென்று நாம் படகிலேற்றித் துரத்திவிட்ட மனிதன் இவன்தானென்று தெரிந்துகொண்டு அவர்களும் தங்களை மன்னிக்கும்படி அவன் கால்களில் விழுந்தார்கள். அவனும் அவர்கள் செய்த பிழையைப் பொறுத்து அவர்களைத் தன் குடிசைக்குள் அழைத்துக்கொண்டுபோனுன். அப்போதுதான் பெர்டிஞண்டு தன் வேலையையெல்லாம் செய்து முடித்துவிட்டுவந்து மிராண்டாவோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தான். இருவரும் இறந்துபோனதாய் ஒருவர்க்கொருவர் எண்ணி விசனப்பட்டுக்கொண்டிருந்த தகப்பனும் பிள்ளையும் ஒன்றுய்க் கூடினபோது அவர்களுக்கு உண்டான சந்தோஷத்தை என்னென்று சொல்லலாம்! யாவரும் ஒன்றுய்க்கூடி அன்றையதினத்தை அங்கேயே போக்கினுர்கள்.

இதற்குள்ளே அந்தப் பிசாசு உடைந்துபோன கப்பலை நன்றுய்ச் செப்பனிட்டுப் பிரயாணத்திற்குச் சித்தமாகச்செய்தது. பின்பு பிராஸ்பிரோ அந்தப் பிசாசுக்குத் தன் இஷ்டப்படிபோகச் செலவுகொடுத்துவிட்டுத் தன் சகோதரன் முதலியவர்களெல்லா

ளையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு நேபில்ஸ்நகரம் போய்ச் சேர்ந்தான். அங்கே பெர்டிஞண்டுக்கும் மிராண்டாவுக்கும் கலியாணம் நடந்தது. நான் எத்தனையோ அழகிகளைப்பார்த்தேன்; இவளைப்போல நல்லபெண்ணை நான் எங்கும் காணவில்லையென்று சொல்லிப் பெர்டிஞண்டு மிகவும் சந்தோஷித்தான். பின்பு பிராஸ்பிரோவும் மிலானுக்கு அரசனாகிச் சுகமாயிருந்தான்.

ஒழுங்குபடுத்தும் சீர்மை.

உலகத்தில் மன்னுயிர்கள் எல்லாரும் ஒத்துச் சுகமாய் வாழ்வதற்குவேண்டிய ஒழுங்குபாடுகள் ஒருவிதமாயில்லை. நாம் செய்யவேண்டிய காரியங்கள் பலவாயிருப்பதால் அதற்கு வேண்டிய ஒழுங்குபாடுகளும் பலவிதமாயே இருக்கின்றன. அந்த ஒழுங்குபாடுகள் எப்படிப்பட்டவையெனில், எல்லாக்காரியங்களும் தேகசிரமம், அர்த்தவிரயம், காலச்செலவு முதலியவை அதிகமாய் இல்லாமல் சுலபத்திலேயே முடியத்தக்க சில ஏற்பாடுகளாம். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணம்போவதை இதற்குத் திருஷ்டாந்தமாகக் கொள்வோம். பயணம்போகிற ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டுவதேதெனில், நாம் இந்த மாதிரியாகப் பிரயாணம் போகவேண்டுமென்றும், வழியில் இவ்விதமாக நடக்கவேண்டுமென்றும், போம்போது மார்க்கத்தில் நமது காலத்தை இவ்விதமாகக் கழிக்கவேண்டுமென்றும் இவைகளைப்பற்றி நன்றாய் ஆராய்ச்சிசெய்யவேண்டும். யாவரும் சுலபமாய் யாத்திரை செய்வதற்குவேண்டிய நீராவியந்திரம்முதலிய சாதனங்களை ஏற்படுத்துகிறவர்களோ, பிரயாணிகளான லக்ஷோபலக்ஷம் பிரஜைகளுள் ஒவ்வொருவருடைய சாதக பாதகங்களையும் சவுக்கியத்தையும் லாபநஷ்டங்களையும் நன்றாய் ஆராய்ந்து அறிந்து அதற்குத் தகுந்தபடி ஒழுங்குபாடுகள் செய்யவேண்டும். ஆனால் அது வருத்தமானகாரியமே. ஆயினும் கொஞ்சம் பிரயாசை எடுத்துக்கொண்டு நன்றாய் ஒழுங்குபடுத்துவார்களானால், அதனால் ஜனங்களுக்கு அனுகூலமுண்டாவதுமாத்திரமேயன்றி மேற்படிச் சங்கத்தார்க்கும் விசேஷலாபங் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

நீராவியந்திரம் முதலிய லோகோபகாரமான காரியங்களைச் செய்கிற சங்கத்தார் முதல்முதல் கவனிக்கவேண்டுவது என்னவெனில், தாம் மேலானவர்களாயும் மற்றப் பிரஜைகளைத் தம் இஷ்டப்படி நடத்துவதாயும் நினைக்கக்கூடாது. தாமும் அந்தப் பிரயாணிகளுள் ஒருவராகப்பாவித்து, அப்படியிருந்தால் தம்

விஷயத்தில் அந்தச் சங்கத்தார் எப்படி நடக்கவேண்டுமென்று தோன்றுமோ, அப்படியே தாம் பிரஜைகளுக்கு அனுகூலமான ஒழுங்குபாடுகள் செய்யவேண்டும். இப்படியே குடிகளின்மேல் தீர்வை சுமத்துகிறவர்களும் தாமும் அந்தக் குடிகளுள் ஒருவராகப் பாவித்து அதற்கேற்றபடி நடத்துவதே உத்தமமானது. இவ்வித மாய் எந்த வியாபாரத்திலாகுலும் சரி, அதன் பயனை அனுபவிப் பவர்களுள் தானும் ஒருவனுக நினைத்து, அப்போது தன் மன திற்கு எவ்விதமாய்த் தோன்றுமோ அப்படி நடத்துபவனே பிர ஜைகளுக்கு க்ஷேமமுண்டாக்கித் தானும் நல்ல லாபமடைபவனு வான். அப்போதுதான் அந்தந்தக்காரியத்தை நடத்தவேண்டிய நல்வழிகளும் புதிதுபுதிதாய் மனதில் தோன்றும்.

ஆனுல் இப்படிப் பலகாரியங்களிலும் தகுந்த ஒழுங்குபாடு செய்வது எளிதான காரியமல்ல. அதற்கென்று ஏற்படுகிற பிரபுக் கள் தன்னயத்தை விரும்பாதவர்களாயும், தீர்க்காலோசனை கற்பனு சக்திமுதலிய நற்குணங்களுடையவர்களாயும், சிறந்த காரியங்கள் எதையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆவலுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். மேலும் மிகுந்த சாமர்த்தியமும் வழக்கமும் அவர்களுக்கு விசேஷமாய்வேண்டும். பழக்கத்தால் உண்டாகும் அறிவுக்கும் புத்தகங்களைப் படிப்பதனுல் உண்டாகும் அறிவுக்கும் வெகு வித்தியாசமுண்டு. உலகநீதியை ஒருநாளும் அறியாத ஒருவன், உலகத்தார்க்கு வேண்டியகாரியம் எவ்வளவு அற்பமா யினும் அதைச்செய்ய வல்லவனுகான். அப்படியே ஒருநாளும் சேனையை நடத்திப் பழகாதவன் ஒருபோதும் சிறந்த தளகர்த்த னுகான். சூட்சுமபுத்தியும் நல்ல ஒழுங்குகள் செய்யவேண்டு மென்னும் ஆவலுமுடையவனுய் ஒருவன் இருப்பானுனுல், அப் படிப்பட்டவனுக்கு முன்னதாய் விசேஷமான அனுபவம் வேண்டு மென்று அவசியமில்லை. சிலநாளைப் பழக்கத்திலேயே அப்படிப் பட்டவன் நல்ல தேர்ச்சியடைவான். ஆயினும் எப்படிப்பட்டவ னுனுலும் சிறிதுகூட அனுபவமில்லாமல் ஒரு காரியத்தை நடத்து வது மிகவும் அசாத்தியமே. நல்ல சூட்சுமபுத்தியும் விவேகமு முடையவரான லார்ட்டு பேக்கன் என்பவர் ஆலோசனைச் சங் கத்தாரைக்குறித்து யாவரும்பார்த்து அதிசயிக்கத்தக்க சில கிரந் தங்கள் எழுதினுர்; அப்படிப்பட்டவர்க்கு அனுபவம் விசேஷ மாய் வேண்டுவதில்லையென்றுலும், அவர்கூட இரண்டொரு இடங் களில் பழகியே அவைகளை எழுதியிருக்கவேண்டும்.

செம்மையாய் ஒழுங்குசெய்வதனுல் நல்ல பயன்கள் விளையு மென்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. சிறிதளவு கவனமும் கா லமும் செலவுசெய்வதனுலேகூட விசேஷலாபம் உண்டாகுமென் பதைத் தெரிந்துகொள்வது யாவர்க்கும் மிக்க உபயோகமாகும். ஓரிடத்தில் ஒரு சங்கம் கூடுவதாயிருந்தால், அதற்கு முன்னதா

யே இன்னவிடத்தில் இவ்வளவு பேர்வந்து கூடுவார்களென்று கண்டு அதற்குத் தக்கபடி ஏற்பாடு செய்திருந்தால் நாம் எடுத்துக் கொள்ளும் பிரயாசைக்கு நான்குமடங்கு அதிகமான சவுக்கியம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

நாள்தோறும் நமது கண்முன்னே நடக்கிறவிஷயங்களில் உதாரணம் எடுத்துக்காட்டினுல் அது என்றும் மனதைவிட்டு நீங்காமலிருக்குமாதலால் அப்படிப்பட்ட உதாரணமே ஒன்று இதற்கு எடுத்துக்காட்டுகிறோம். கொஞ்சநாளைக்குமுன்னே ஒரு நகரத்தில் மகா சபையொன்று கூட்டப்பட்டது. அப்படிப்பட்ட பெரிய கூட்டம்கூட ஒருநாளும் கண்டதில்லையென்று அப்போதிருந்த வயதுமுதிர்ந்தவர்களெல்லாரும் சொல்லிவியந்தார்கள். அப்போது உண்டான சங்கடத்தையும் ஒருநாளும் அனுபவித்ததில்லையாம். சபை கலைந்தபின்பு அந்தந்தப் பிரபுக்கள் தங்கள் தங்கள் வண்டி அகப்படாமல் அதற்காக மூன்றுமணிநேரம் காத்திருக்கவேண்டியதாயிற்று. அப்போது அங்கே வந்திருந்தவர்களுள் ஒழுங்குபடுத்தத்தக்க திறமையுடைய ஒருவன் அந்தச் சங்கடத்தைக்கண்டு, இப்படி வருத்தப்படும்படி ஏன் வைத்துக்கொண்டீர்கள். சிறிதளவு முயற்சி செய்திருந்தால் இப்போது எவ்வளவோ அனுகூலமுண்டாயிருக்குமே. விசேஷமான இந்த வண்டிக்கூட்டத்தை நான்குபிரிவாகப் பிரித்து அதைத் தனித்தனியாக விட்டுவைத்தால் இவ்வளவு வருத்தமுண்டாயிராதே. இரட்டைக்குதிரை பூட்டின மேல்மூடியில்லாத வண்டிகளெல்லாம் ஒருபுறம்; மேற்படி மேல்மூடியுள்ள வண்டிகள் ஒருபுறம்; கூலிக்குவந்த வண்டிகளெல்லாம் ஒருபுறம்; கூலிக்கு வாங்காத சொந்தமான ஒற்றைக்குதிரை வண்டிகளெல்லாம் ஒருபுறம்; இப்படி நான்காகப் பிரித்து நான்கு இடங்களில் விட்டு அததற்கு விளம்பரம் ஒன்று ஒட்டிவிட்டால் இப்படி ஏன் வருந்தவேண்டுமென்றான்.

இப்படிப்பட்ட சிறந்த ஒழுங்குபாடுகள் செய்வதற்கு முக்கியமான சில குறைவுகளுண்டு. என்னவெனில், சவுக்கியத்திற்கு ஏற்றபடி ஒழுங்குபாடு செய்துகொள்வதற்கில்லாமல் எல்லாம் ஆதிதொடங்கி வந்த ஓரேவழியில் நடத்தப்படுகின்றன. இதனாலே அதற்கு மேன்மேலும் அபிவிருத்தியுண்டாவதில்லை. சிலர்தாம் எல்லாந் தெரிந்தவர்களென்றெண்ணிக் காரணமில்லாமல் தாங்கொண்ட கொள்கையையே உறுதியாகக்கொண்டு புதிதாய் நல்ல ஏற்பாடுகள் செய்யாமலிருந்துவிடுகிறார்கள். இவ்வகைக் குறைவுகளாலேயே நல்ல ஏற்பாடுகள் மேன்மேலும் அதிகரிப்பதில்லை.

துரதிர்ஷ்டங்கள் ஒருங்குகூடிய மலை.

உலகத்திலுள்ள மானிடர்களுடைய துர்ப்பாக்கியங்களையெல்லாம் ஒரு பெரிய மலையாகச்சேர்த்துப் பின்பு அதை யாவர்க்கும் சரிபங்காகப் பங்கிட்டுக் கொடுக்கும்படியிருந்தால், இப்போது தாம் மிகவும் வருத்தப்படுவதாக நினைத்துக்கொண்டிருப்பவர்களெல்லாம், அப்படிப் பங்கிடுவதனால் தமக்குக் கிடைக்கிற பாகத்தைவிடத் தமக்கு எப்போதும் இருப்பதே மேலானதென்று தெரிந்துகொள்வார்களென்று ஒருவர் சொல்லியிருக்கிறார். எவனொருவனை நாம் மிகவும் சுகியென்று நினைக்கிறோமோ, அவனுடைய சுகதுக்கங்களையும் நம்முடைய சுகதுக்கங்களையும் ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள்வதாயிருந்தால், அப்போது தந்தமக்கு இருக்கிற கஷ்டநஷ்டங்களே பிறருடையவைகளைவிடச் சுலபமானவையென்று யாவர்க்குந் தோன்றும் என்று மற்றொருவர் சொல்லுகிறார்.

இவ்விரண்டு விஷயங்களையும் நினைத்துக்கொண்டே நான் ஒரு நாள் என் ஆசனத்தில் உட்காந்திருக்கையில், திடீரென்று மெய்மறந்து தூங்கிப்போனேன். அப்போது என் மனதில் ஒரு தோற்றமுண்டாயிற்று. அதாவது: உலகத்து மனிதர்கள் எல்லோரும் அவரவருடைய துர்ப்பாக்கியங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வரும்படியாகப் பிரமதேவர் தேசமெங்கும் ஒரு விளம்பரஞ்செய்தார். அவைகளையெல்லாம் கொண்டுகொட்டுவதற்காகப் பெரிய மைதானமொன்று இடமாய் ஏற்படுத்தப்பட்டது. அந்த மைதானத்தின் நடுவேபோய் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்காந்து அங்கே நடந்த வினோதங்களையெல்லாம் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். உலகத்திலுள்ள மனிதர்களெல்லாரும் ஒருவர்பின் ஒருவராய் மேல்விழுந்து நெருக்கிக்கொண்டு ஆள்தூக்கமாட்டாத மூட்டையும் தலையுமாய்வந்து, அவரவர் துர்ப்பாக்கிய மூட்டைகளையெல்லாம் ஒரு குப்பலாகப் போட்டுக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரத்தில் அந்த துரதிர்ஷ்ட மூட்டைகளெல்லாம் ஒரு பெரிய பர்வதத்தளவாகி மேகமண்டலத்தையும் தாண்டிப் போயின.

அவ்விடத்தில் ஒடிந்து விழுந்துபோவதுபோல மிகவும் மெல்லிய உடலோடு அழகிய பெண் ஒருத்தி சித்திரவிசித்திரமான சரிகைவேலைப்பாடுகள் அமைந்த சிறந்த பட்டாடையும் ஆபரணங்களும் அணிந்து ஒரு கையில் பூதக்கண்ணாடியொன்றை ஏந்திக்கொண்டு ஓர்விதக் கலவரமான பார்வையோடுநின்று அவ்விடத்தில் நடக்கவேண்டிய காரியங்களையெல்லாம் மிகவும் சுறுசுறுப்பாக

நடத்திக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஆசையென்று பெயர். அந்தப்பெண் ஒவ்வொரு மனிதனையும், அவனவனுக்கு வேண்டிய மூட்டையைக் கட்டிக்கொடுத்து அவனவன் தோளிலேற்றி, அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவருவதே வேலையாயிருந்தாள்.

அவ்விடத்திற்குச் சிலர் வரக்கண்டேன். அவர்களைப்பார்க்க எனக்கு வெகு ஆச்சரியமுண்டாயிற்று. ஒருவன் பழைய பட்டாடையொன்றிலே பத்திரமாய் ஒளித்துக் கட்டிக்கொண்டுவந்து ஒரு மூட்டையை அங்கே எறிந்தான். பரிசோதித்துப்பார்த்ததில் அது தரித்திரமாயிருந்தது. அப்படியே மற்றொருவன் தான் சுமக்கமாட்டாத சுமையொன்றைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தக் குப்பலில் எறிந்தான். அவிழ்த்துப்பார்த்ததில் அது அவனுடைய பெண்சாதியாயிருந்தது.

இப்படியே கோபம் ரோஷம்முதலிய பல அற்பமான மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு ஸ்திரீபுருஷர்களும் மற்றவர்களும் அநேகர் வந்தார்கள். அவற்றுள் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்ததென்னவெனில், தம்முடைய துரதிர்ஷ்டத்துக்காகத் தங்கள் மார்புகூடப் பிளந்துபோம்படிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டே அனைவரும் வந்தார்களென்றாலும், துணிந்து தங்களையே அந்தக் குப்பலில் எறிந்துவிட்டவரொருவருமில்லை. அங்கே வந்து நின்று சற்றுநேரம் அல்லாடித் தலையசைத்துப் பெருமூச்சுவிட்டு வந்தபடியே போய்விட்டார்கள். ஆய்ந்துபார்த்தவளவில், அந்தக் கும்பலெல்லாம் வெகுவாய்த் தெய்வகதியாக நேரிட்ட அங்கக்குறைவுகளாகவேயிருந்தன. பாவமாகட்டும், தோஷமாகட்டும், கெட்டநடத்தையாகட்டும் ஒன்றுகூட அந்தக் குப்பலில் வந்து விழவில்லை. அவரவருடைய துராசை கோபம் முதலிய கெட்டகுணங்களையெல்லாம் நீக்கிக்கொள்ள யாவர்க்கும் இது ஒரு நல்ல தருணமாய் வாய்த்ததென்று நான் எண்ணிக்கொண்டிருந்தேனாகையால், அதற்கு முழுதும் மாறாக நடந்த இப்படிப்பட்ட நடத்தையைக்கண்டு எனக்கு உண்டான வியப்பை நான் என்னென்று சொல்வேன்!

அப்படி வந்த பலபேர்களுள் மிகவும் துஷ்டனான ஒருவன் தன் குற்றங்களின் மூட்டையைத் தூக்கிக்கொண்டுவந்தான். அவன் போட்ட மூட்டையைப் பரிசோதனைசெய்ததில், தன் துர்க்குணங்களையெல்லாம் கொண்டுபோட வேண்டுவதைவிட்டு தன் நினைவைக்கொண்டு போட்டிருப்பதாகத் தெரிந்தது. அவன் பின்னே கேடுகெட்ட போக்கிரியொருவன் வந்து தன் மூடத்தனத்தை அங்கே கொண்டுபோடுவதற்குப்பதிலாகத் தன் நன்னடக்கையைக் கட்டியெறிந்தான்.

இப்படியாகப் பலபேரும் தத்தம்மூட்டையைக் கொண்டுவந்தபோது, அங்கே வெகு பரபரப்பாய் வேலைசெய்துகொண்டிரு

ந்த ஆசையென்கிற பெண் என்னைப்பார்த்து, நான் ஒரு முழுச் சோம்பேறியென்று கண்டு என்னிடத்திற்கு வந்தாள். அவளைப் பார்க்கவே எனக்கு மிகவும் திகிலுண்டாயிற்று. என் பக்கத்தில் வந்தவுடனே அவள் தன் கையில் வைத்துக்கொண்டிருந்த பூதக் கண்ணாடியை என் கண்ணெதிரே காட்டினாள். அதில் என் முகத்தைப் பார்க்கையில் எனக்கு உண்டான வியப்பை நான் என்னென்று சொல்வேன்! எவ்வளவு சிறியமுகம் எவ்வளவு பெரிதாய்த்தெரிந்தது! என் முகம் மட்டுமிதமில்லாமல் மிகவும் அகலமாய்த்தோன்றவே, இதென்ன வேஷக்காரன் கட்டிக்கொள்கிற முகத்தைவிட விகாரமாயிருக்கிறதேயென்று அதினிடத்தில் எனக்கு மிகவும் எரிச்சலுண்டாகி நான் அதை அந்தத் தூரதிர்ஷ்டப்போரில் எறிந்துவிட்டேன். அத்தருணத்திலேதான் மற்றொருவன் தன் முகம் மிகவும் நீளமாயிருக்கிறதென்று அதை எறிந்துவிட்டு என் பக்கத்திலே வந்துநின்றான். அவன் மூக்குமாத்திரமே முகத்தளவு நீண்டிருந்ததென்றால், அவன் முகம் யாவரும்பார்த்துப் பரிகாசம்பண்ணும்படி அதிக நீளமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமென்ன?

இவ்விதமாக உலகத்து மானிடர்கள் அனைவரும் தங்கள் துர்ப்பாக்கியங்களையெல்லாம் கொண்டுவந்துபோட நான் வெகு சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். நாங்கள் அந்தத் தூரதிர்ஷ்ட மலையைச்சுற்றி உட்கார்ந்து அதிலுள்ள பலவிதமான பொருள்களையும் பரீக்ஷித்துப்பார்க்கையில், தூரத்துமலை வெழுமூண்டிருக்குமென்கிற உலகுவழக்குபோலவே தாங்கள் சவுக்கியமென்றும் சந்தோஷமென்றும் நினைத்திருந்தவையெல்லாம் வாஸ்தவத்தில் இப்படிப்பட்டவையென்று ஒருவர்க்காவது தெரியாமற்போகவில்லை. தாங்கள் யார்யாரிடத்தில் எதெதைச் சவுக்கியமென்றும் சந்தோஷமென்றும் நினைத்திருந்தார்களோ, அதது அவ்வவர்க்குப் பெருந்துக்கமாகவும் தலைமூட்டையாகவும் இருந்ததென்பதைக்கண்டு யாவரும் வியந்தார்கள்.

இப்படி யாவரும் தங்கள் தங்கள் துர்ப்பாக்கியங்களைப்பற்றிப் பரபரப்பாயிருப்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், அவரவர் தந்தமக்கு இஷ்டமான மூட்டையொன்றை எடுத்துக்கொண்டு தங்கள் வீட்டுக்குப்போகலாமென்றதாய்ப் பிரமதேவர் மற்றொரு விளம்பரஞ்செய்தார்.

அந்த விளம்பரத்தைக் கேட்டவுடனே ஆசையானவள் முன்போலவே அதிக சுறுசுறுப்பும் பரபரப்புமாய், அவனவனுக்கு வேண்டிய மூட்டையை எடுத்துக்கொடுத்து அவனவனைத் தன் வீட்டுக்கு அனுப்புகிற வேலையிலிருந்தாள். அதற்காக ஜனங்கள் அப்போது மேல்விழுந்து பட்டபாட்டை நாம் என்னென்று சொல்

வோம்! அத்தருணத்தில் நான் கண்ட சில காட்சிகளை இங்கே சற்று எடுத்துச்சொல்லுகிறேன். தன் ஆஸ்திக்குப் பின்பாத்தியஸ்தன் ஒருவனைவேண்டித் தலையும் நரைத்துத் தாடையும் ஒட்டிக் கிழவனான பெரிய மனிதனொருவன் தன் துர்ப்பாக்கியத்தைக்கொடுத்து அதற்குப்பதிலாக மிகக்கோபங்கொண்டு ஒருவன் எறிந்துவிட்ட பெற்றோர்க்கு அடங்காத பிள்ளையொருவனைப் பெற்றுக்கொண்டு போனான். அடங்காப்பிடாரியான அம்மகன் அரைநாழிகைக்குள்ளே அந்தக் கிழவனைத் தாடையில் அறைந்து தலைமயிரைப் பிடித்திழுத்து மண்டையையும் பிளக்கப்போனான். அதுகண்டு அந்தக் கிழவன் வெகு வருத்தத்தோடு அந்தப் பிள்ளைக்குத் தகப்பனண்டைபோய், அவன் மகனை அவனே எடுத்துக்கொண்டு தன் பொருளைத் தனக்குத் திருப்பிக்கொடுத்துவிடும்படி வேண்டினான். ஆயினும் அவர்கள் இருவரும் வேண்டுமென்று விரும்பி எடுத்துக்கொண்டதை ஒருவர்க்கும் திருப்பக்கூடவில்லை.

அப்போது பெண்பிள்ளைகளும் பலபேர் இத்தருணத்தில் அழகான அவயவங்கள் தேடிக்கொள்ளவேண்டுமென்று அதற்காக வெகு அவசரமாய்ப்போவதும் வருவதுமாயிருந்தார்கள். ஒருத்தி தன் நரைத்தமயிரை மாற்றிச் செம்பட்டைமயிரைத் தேடிக்கொண்டிருந்தாள். மற்றொருத்தி தன் சிற்றிடையைமாற்றிப் பருத்த தோள்கள் வேண்டுமென்றாள். இப்படிப் பலபேர் பலவிதமான மாற்றல்செய்துகொண்டிருந்தார்கள். ஆயினும் தங்களுக்கு இஷ்டமாய்ப்புதிதாக ஒன்றைப் பெற்றுக்கொண்டதும் முன் இருந்த பொருளைவிட அது மிகவும் கேடுகெட்டதென்று கண்டறியாதவர் ஒருவரும் இல்லை. இப்படியே சகலமானபேர்களும் தங்களுடைய பொருளைக்கொடுத்துப் புதிதாய் ஒன்றைப் பெற்றுக்கொண்டபோது இவ்விதமாகவே நினைக்கக்கண்டேன். இப்படிப் புதிதாய் அவரவர்க்குக் கிடைத்த சுகதுக்கங்களைத்தாங்க அவரவர்க்கு இயற்கையாய்க் கிடைத்த வல்லமையே போதுமானதாயிருந்ததோ அல்லது அவற்றைப் புதிதாய்த்தாங்க அதிகமாய் முயற்சிசெய்யவேண்டியிருந்ததோ அதைமட்டும் எனக்கு நிதானிக்கக்கூடவில்லை.

என் சங்கதியைமாத்திரம் நான் ஒளிப்பானேன். அதையும் கொஞ்சம் சொல்லுகிறேன் கேளுங்கள். என்னுடைய நேசன் தன் நீண்டமுகத்தைத்தள்ளி அகன்றமுகத்தைத் தரித்துக்கொண்டபோது அந்த விகாரத்தைப்பார்த்து எனக்கு உண்டான சிரிப்பை நான் என்னென்று சொல்வேன்! அதைக்கண்டு அவன் தன்னைப்பார்த்து யாவரும் பரிகாசம்பண்ணுகிறார்களென்று தெரிந்து மிகவும் வெட்கமடைந்தான். என்காரியமும் என் இஷ்டப்படி நிறைவேறவில்லை. நான் என் முகத்தைத் தொடப்போனபோது உதடு ஒன்று கையில் அகப்பட்டது. அதின் பக்கத்திலிருந்த மூக்

கின்மேல் தெரியாமல் நாலைந்து குத்து குத்தினேன். இப்படி நான் ஒன்றைத் தேடப்போனபோது மற்றொன்று அகப்பட்டது. இப்படியே இரண்டு மூன்றுபேர் பிறர்பார்த்துப் பரிகாசம்பண்ணும்படித் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியாக அந்தத் துரதிர்ஷ்டங்கள் ஒன்றுகூடிய பர்வதம் முழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்குமாகச் சமமாய்ப் பகுத்துக் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டு திரும்பும்போது தந் தம் பாகத்துக்கு வந்த துரதிர்ஷ்டத்தைப்பார்த்து ஒன்றுந் தோன்றுமல் அனைவரும் அங்கேயே இங்கும் அங்கும் தவித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவ்விடத்தில் எங்கேபார்த்தாலும் மொணமொணவென்று விசனப்படுவதும், குற்றங்கூறுவதும், குறைப்படுவதும், புலம்புவதுமாயேயிருந்தது.

இவ்வாறு மனிதர்கள் எல்லாரும் ஒருமிக்க படுகிற பரிதாபத்தைப்பார்த்து மனமிரங்கிப் பிரமதேவர், இப்போது யாவரும் எடுத்துக்கொண்ட மூட்டைகளையெல்லாம் அப்படியே கும்பலாகக்கொண்டுபோட்டு அவரவருடைய பழைய மூட்டையையே எடுத்துக்கொண்டுபோம்படி மற்றொரு கட்டளையிட்டனுப்பினர். அந்தக் கட்டளையைக்கேட்கவே அனைவரும் மிக்கமனமகிழ்ச்சிகொண்டு தாங்கள் தலையில் ஏற்றிக்கொண்டிருந்த மூட்டைகளையெல்லாம் வெகுசீக்கிரத்தில் அங்கே கொண்டுபோட்டார்கள். இவ்வளவுநேரம் யாவரையும் மயக்கி மூட்டை கட்டிக்கொடுத்து அவ்விடத்துக்கு அழைத்துவந்து வேலைசெய்துகொண்டிருந்த ஆசையென்பவளும் உடனே மறைந்துபோனாள். மிகவும் சுந்தரமான வடிவத்தோடு மற்றொரு தெய்வப்பெண் அவ்விடத்திற்கு வந்தாள். அவளுடைய நடக்கைகளெல்லாம் மிகவும் நிதானமாயிருந்ததுந் தவிர, அவளுடைய தோற்றமும் பார்வையும் யாவர்க்கும் உற்சாகமுண்டாக்கத்தக்கதாயிருந்தது. அவள் அடிக்கடி ஆகாசத்தைநோக்கிப் பிரமனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பொறுமையென்று பெயர். அவள் அந்தத் துரதிர்ஷ்ட மலையண்டைவந்து நின்றவுடனே, அந்த மலை முன்னிருந்ததில் மூன்றிலொருபங்குகூட இராமல் அவ்வளவு குன்றிப்போயிற்று. அதென்ன ஆச்சரியமோ! உடனே அவள் அவரவர் துர்ப்பாக்கியத்தை அவரவர்க்குத் திருப்பிக்கொடுத்து, அதனை வைத்துக்கொண்டு அவ்வளவோடு பொறுத்து வாழவேண்டிய விதத்தைக் கற்பித்து அனுப்பினாள். நமது அதிர்ஷ்டத்துக்குத்தக்கபடி ஏதோ ஒன்றை ஏற்றுக்கொண்டு போம்படியில்லாமல் இப்படியாயிற்றேயென்று மிகவும் சந்தோஷமும் திருப்தியும் அடைந்து அனைவரும் போய்விட்டார்கள்.

இந்தக் கனவினின்றும் நாம் கண்டறியக்கூடிய பலவிதமான நீதிகளுள்ளும் நான் முக்கியமாய்க் கற்றுக்கொண்ட நீதி ஒன்று.

அதென்னவெனில், நமக்கு நேரிடுகிற சங்கடங்களைக்கண்டு நாம் மனவருத்தப்படக்கூடாதென்றும், பிறருடைய சவுக்கியங்களைப் பார்த்துப் பொறாமைப்படக்கூடாதென்றும் உறுதியாய்க் கண்டு கொண்டேன். பிறருடைய கஷ்டநஷ்டங்களை நாம் எப்படிச் சரியாய் ஊகித்தறியக்கூடும்? இந்தக் காரணத்தாலேயே நாம் பிறருடைய துன்பங்களை எளிதாக நினைக்கக்கூடாதென்றும், நம் அண்டை அயலாருடைய வருத்தங்களையெல்லாம் இரக்கமும் பரிதாபமுமாய்ப்பார்த்து உபகரிக்கவேண்டுமென்றும் கண்டறிந்தேன்.

சிறுவர்க்கான கதை.

இரண்டு சகோதரர்கள்.

முன் ஒருகாலத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவன் மிகவும் தனிகன்; மற்றொருவன் ஏழை. அந்த தனிகன் தட்டாரத்தொழிலில் அமர்ந்திருந்தான். ஆயினும் அவன் மிகவும் கெட்டகுணமுள்ளவன். தரித்திரனோ ஈர்க்கு அறுத்து விற்று ஜீவித்துக்கொண்டிருந்தான். அவன் களங்கமற்ற மனமும் யதார்த்தமான நடக்கையும் உடையவன். அவனுக்கு இரட்டையாய்ப்பிறந்த இரண்டு குழந்தைகளுண்டு. அவர்களுள் ஒருவனைப்பார்த்தால் மற்றவனைப் பார்க்கவேண்டாம்; அப்படி உருவத்திலும் அழகிலும் ஒருவர்க்கொருவர் சிறிதும் வேற்றுமையில்லாத அவ்விரண்டு பிள்ளைகளும், மிக்க தனவானான தங்கள் சிற்றப்பன் வீட்டுக்கு அடிக்கடிபோய் அங்கேயே அவனோடு கூடப் புசிப்பதும் சந்தோஷமாய் விளையாடுவதுமாயிருந்தார்கள். அவனும் அப்பிள்ளைகளை அன்பாகவே ஆதரித்துவந்தான். இப்படியிருக்க, ஒருநாள் அவ்வெளியவன் கட்டைவெட்டக் காட்டுக்குப் போனபோது அங்கே சுவர்ணமயமான பறவையொன்றைக் கண்டான். அப்படிப்பட்ட அழகான பக்ஷியை அவன் ஒருநாளும் கண்டதில்லை. அதைப்பார்த்து அவன் மிகவும் ஆச்சரியப்பட்டு ஒரு கல்லையெடுத்து அதன்மேலெறிய, அந்தக் கல் சரியாய் அந்தப் பக்ஷியின்மேல் படாமல் கொஞ்சம் குறிதப்பிப்பட்டு அதன் ஒரு இறகுமட்டும் கீழேவிழுந்தது. அவன் அந்த இறகை எடுத்துக்கொண்டு தட்டானான தன் தம்பியண்டை கொண்டுபோய்க்காட்ட, அவன் அதைப்பார்த்து உயர்ந்த தங்கமென்றுகண்டு அதைத் தான் எடுத்துக்கொண்டு அதற்கேற்ற விலையை அவனுக்குக் கொடுத்தனுப்பினான். மறுநாள் அந்த எளியவன் வழக்கப்படியே காட்டுக்குப்போய் ஒரு மரத்தின்மே

லேறி ஒரு கிளையை வெட்டப்போக, அங்கிருந்து அந்தப் பொற்பறவை பறந்துபோகக்கண்டான். அந்தக் கிளையை நன்றாய் உற்றுப்பார்க்கையில், அதில் ஒரு பக்ஷிக்கூடும், அந்தக் கூட்டில் ஒரு பொன் முட்டையும் இருந்தன. அம்முட்டையைக் கண்டு அவன் அதைத் தன் தம்பிக்குக் கொண்டுபோய்த்தர, அவன் அதைப்பார்த்து நல்ல சுவர்ணமென்று ஆச்சரியப்பட்டு அதையும் முன்போலவே தகுந்த விலைகொடுத்து வாங்கிக்கொண்டு, அப்பா நீ அந்தப் பக்ஷியையே இங்கே பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றான். அப்படியே அவன் மறுதரம் காட்டுக்குப் போனபோது அந்தப் பொற்பறவை முன்போலவே அம்மரத்தில் உட்காந்திருக்கக்கண்டு அதைக் கவண்டுவிட்டு அடித்தான்; அந்தப் பக்ஷி கீழேவிழுந்தது. அதையும் அப்படியே எடுத்துக்கொண்டுபோய்த் தம்பிக்குக் காட்டினான். அந்தத் தட்டான் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு வாங்கிக்கொண்டு அவனுக்கு வேண்டியபொருள் கொடுத்தனுப்பினான். அவன் பணத்தை ஒருநாளும் கண்ணாலேகூடக் காணாதவனாதலால் அவ்வளவு மொத்தத்தை ஒருமிக்கப்பார்க்கவே மிகவும் சந்தோஷமாய் அதைப் பெற்றுக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான்.

அந்தத் தட்டான் மிகுந்த சூதும் சாமர்த்தியமும் தைரியமும் உடையவன். அந்தப் பக்ஷியின் பெருமையை எப்படியோ அறிந்துகொண்டு தன் பெண்சாதியை அழைத்து, பெண்ணே! இதைப் பத்திரமாய் எனக்குச் சமைத்துக்கொண்டுவா; சிறிதளவுகூட எறியப்படக்கூடாது; ஜாக்கிரதையாய்ச் சமைத்துக்கொண்டுவா; இதை முழுதும் நானே தின்னவேண்டுமென்று சொல்லி அதை அவள்கையில் கொடுத்தான்.

அந்தப் பொற்பறவை சாதாரணமான பக்ஷிகளைப்போலன்று; அதினிடத்தில் அதிசயமான சக்தியொன்றுண்டு. அதன் குடலையாகட்டும் இருதயத்தையாகட்டும் எவனொருவன் புசிக்கிறானோ, அவன் தலையணையண்டை நாள்தோறும் காலையில் எழுந்திருக்கையில் ஒவ்வொரு பொன்உருண்டை விழுந்துகிடக்கும். அவன் பெண்சாதி அந்தப் பறவையை வாங்கிக்கொண்டுபோய் அவன் சொன்னபடியே சித்தப்படுத்தினாள். அவள் அதை அடுப்பில் வைத்துவிட்டு ஏதோ கொஞ்சம் காரியமாய் அப்புறம்போகையில், அங்கே வந்து விளையாடிக்கொண்டிருந்த அந்தச் சிறுபிள்ளைகள் இருவரும் அடுப்பிலிருந்த பக்ஷியைச் சற்றே கிளறினார்கள். கிளறவே இரண்டொரு துண்டு கீழேவிழுந்தது. அதைக் கண்டு அவர்களுள் ஒருவன் நாம் இதைப் புசிப்போம்; எனக்கு அதிக பசியாயிருக்கிறது; இதை நாம் தின்றது யாருக்குத் தெரியப்போகிறதென, அப்படியே அதை அவர்கள் பங்கிட்டுத் தின்றுவிட்டார்கள். அத்தருணத்தில் வெளியேபோனவள் திரும்பிவந்து அந்தப் பிள்ளைகள் ஏதோ தின்றுகொண்டிருக்கக்கண்டு, நீங்கள்

என்ன தின்கிறீர்களென்று கேட்க, அவர்கள், அடுப்பிலிருந்து என்னவோ கீழே தெறித்துவிழுந்தது; அதைத் தின்கிறோமென்றார்கள். குடலும் இருதயமும் காணுமற்போகவே அவைகளையே இப்பிள்ளைகள் தின்கிறார்களென்று கண்டு, தன் புருஷன் கோபித்துக்கொள்ளப்போகிறானேயென்று மிகவும் பயந்து, ஒரு கோழிக்குஞ்சைக்கொன்று அதின் குடல்முதலியவைகளைப் பிடுங்கி அந்தக்கிளி வயிற்றுக்குள் அடைத்து அதை நன்றாய்ப் பக்குவப்படுத்தி அதை அப்படியே கணவனண்டை கொண்டுபோனாள். அவன் கடுகளவுகூட விடாமல் அதை வெகு சந்தோஷமாய்ப் புசித்தான். அவன் பேராசைகொண்டிருந்தபடியே மறுநாள் உதயமாவதற்கு முன்னே எழுந்து பொன்கட்டியொன்று இருக்குமென்று தலையணையைத் தூக்கிப்பார்க்கையில் அங்கே எள்ளளவுகூடப் பொன் விழுந்துகிடக்கவில்லை.

பக்ஷியின் இருதயத்தையும் குடலையும் தின்ற சிறுவர்கள் இருவருக்கும் தங்களுக்கு நேர்ந்தபாக்கியம் இப்படிப்பட்டதென்று தெரியாது. காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கையில் கணீலென்று ஒரு கட்டி கீழே வீழ்ந்தது. அதை எடுத்துப் பார்க்கையில் சிறந்த பொன்னாயிருந்தது. இரண்டு பிள்ளைகளும் தங்கள் பொன்கட்டிகளை எடுத்துக்கொண்டுபோய்த் தகப்பனுக்குக் காட்ட, அவன் அதைக்கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு இதை என்னசெய்கிறதென்று ஆலோசிக்கலானான். மறுநாளும் அவ்வாறே நடந்தது. அன்றுமுதல் நாள்தோறும் அப்படி நடந்துவந்தது. அந்த எளியமனிதன் மக்களுடைய பொன்களையெல்லாம் தன் சகோதரனுக்குக் கொண்டுகாட்டி அதன் கதையும் இப்படிப்பட்டதென்று அவனோடு சொன்னான். தட்டான் அந்த வர்த்தமானத்தைக்கேட்டு, இந்தப் பிள்ளைகளே அப்பக்ஷியின் சாரத்தைத் தின்றிருக்கவேண்டுமென்று அறிந்து மிகப்பொறாமைகொண்டு, இருதயத்தில் கிஞ்சித்தும் இரக்கமில்லாமல், அப்பிள்ளைகளின் தகப்பனை அழைத்து, அப்பா! நீ இப்பிள்ளைகள் கொடுக்கிற பொன்னை வாங்காதே; இவர்களைப் பிசாசுபிடித்திருக்கிறது; இவர்களை நீ வீட்டிலே வைத்திருப்பாயானால் ஏதாவது பெருந்தீமை விளையும்; காட்டுக்குத் துரத்திவிடு என்று பலதடவை நயவஞ்சகமாகப் பேசினான். தன் அருமைமக்களைவிடச் சிறிதும் மனமில்லாமற் போனாலும் அவன் தனக்கு என்ன கெடுதியுண்டாகுமோவென்று பயந்து கண்ணும் கண்ணீருமாய் மிகவும் துக்கத்துடனே அப்பிள்ளைகளைக் காட்டுக்குத் துரத்திவிட்டான்.

அப்பிள்ளைகள் நடுக்காட்டிலிருந்து வீட்டுக்குப்போக வழி தெரியாமல் அங்கேயே அல்லாடித்திரிந்தார்கள். அப்படி அல்லாடிக்கொண்டுபோகையில் அங்கிருந்த வில்லியொருவன் அப்பிள்ளைகளைப்பார்த்து, நீங்கள் யார்? எங்கிருந்துவந்து இந்தப் பெருங்காட்

டில் தனியே தவிக்கிறீர்களென்று கேட்க, அச்சிறுவர்கள், எங்கள் தலையணையண்டை நாள்தோறும் பொன்கட்டியொன்று விழுந்துகிடக்கிறதென்று கண்டு எங்கள் தந்தை காட்டுக்குத் துரத்திவிட்டார்; அதனால் நாங்கள் இங்கே அல்லாடுகிறோமென்றார்கள். அதைக்கேட்டு அந்த வில்லி, நீங்கள் உழைத்து வேலை செய்பவர்களும் உண்மைபேசுகிறவர்களுமாயிருந்தால் அவன் அப்படிச் செய்தது அநியாயமே என்றுசொல்லி, அவர்கள் பார்வைக்கு அழகாயிருந்ததனாலும், தனக்குச் சொந்தமாய்ப் பிள்ளையில்லாமையாலும் அவன் அப்பிள்ளைகளைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களைத் தன் சொந்தப்பிள்ளைபோலவே வளர்த்துவந்தான். அவனிடத்தில் அந்தப் பிள்ளைகள் சகலவிதமான தனுர்வித்தைகளையும் கற்றுவந்தார்கள். நாள்தோறும் காலையில் அப்பிள்ளைகளின் தலைமாட்டில் வந்துவிழுகிற பொன்கட்டிகளெல்லாம் வேண்டும்போது எடுத்துக்கொள்ளும்படியாகச் சேர்த்துவைக்கப்பட்டன.

அந்தப் பிள்ளைகளுக்குத்தக்க வயதுவந்தபிறகு ஒருநாள் வேடன் அப்பிள்ளைகளைக் காட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்ப்போம்; நீங்கள் வேட்டையாடுவதில் நல்ல சமர்த்தர்களென்று தெரிந்தால் நான் உங்களைச் சுதந்திரமாய் விட்டுவிடலாம் என்றுசொல்ல, அதற்கு அப்பிள்ளைகளும் சம்மதித்து, எதாவது ஒரு காட்டுமிருகம் வந்தால் அடிக்கலாமென்று அதற்காக நெடுநேரம் காத்திருந்தார்கள்; ஒன்றும் வரவில்லை. இப்படியிருக்க வேடன் ஆகாயத்தில் பறவைகள் முக்கோணவடிவமாய்ப் பறந்துபோகக்கண்டு, இதில் இரண்டு மூலையிலுமுள்ள இரண்டு பறவைகளை அடியுங்களென்று கட்டளையிட, அப்பிள்ளைகள் அப்படியே செய்தார்கள். இரண்டொரு நிமிஷத்தில் இரண்டென்கிற எண்வடிவமாய் மற்றொரு பறவைக்கூட்டம் பறந்துபோகக்கண்டு இதிலும் இரண்டு மூலைகளிலுமுள்ள பறவைகளை அடியுங்கள் எனக்கேட்டு அதையும் குறிதப்பாமல் அப்படியே செய்தார்கள். அதைப்பார்த்து அந்த வேடன், பிள்ளைகளே, குறிபார்த்தடிப்பதில் உங்களுக்கு இருக்கிற சாமர்த்தியத்தைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. இனி நான் உங்களைச் சுதந்திரமாய் விட்டுவிடலாம் என்றான்.

அப்படியே அன்றையதினம் அவ்விரண்டு பிள்ளைகளும் தனியே காட்டுக்குப்போய் வேட்டையாடிவந்தார்கள். இராத்திரி போஜனத்துக்கு உட்காருகையில், தங்களுக்குத் தந்தைபோலிருந்த அந்த வேடனைப்பார்த்து, ஐயா, நாங்கள் இப்போது ஒன்று வேண்டுகிறோம்; அதற்கு நீங்கள் அனுகூலமாய் விடைகொடுத்தாலொழிய, இப்போது நாங்கள் புசிக்கப்போகிறதில்லையென, அவன் அது என்ன வேண்டுகோளென்று கேட்டதற்கு, நாங்கள்

வேண்டியவற்றையெல்லாம் கற்றுக்கொண்டாயிற்றல்லவா? இனித் தேசாந்தரங்களைப்போய்ப் பார்த்துவரப்போகிறோம்; உடனே போம்படிச் செலவுகொடுக்கவேண்டுமென்றார்கள்.

அதைக்கேட்டு அவன் மிகவும் அகமகிழ்ந்து, நீங்கள் நல்ல சூரர்கள் பேசுவதுபோலப் பேசுகிறீர்களே! என்னுடைய கோரிக்கையைத்தான் நீங்களும் வேண்டினீர்கள். உங்களுக்கு இஷ்டமானபோது புறப்பட்டு க்ஷேமமாய்ப் போய்வரலாமென்றான். அதைக்கேட்டு அப்பிள்ளைகள் அதிக சந்தோஷமடைந்து ஒருடம்பு ஈருடம்பாய்ப் பூரிக்கும்படி யதேஷ்டமாய்ப் புசித்துத் திருப்தியடைந்தார்கள்.

அவர்கள் தேசயாத்திரைக்குப் பயணம் புறப்படுவதற்காக ஒருநாள் ஏற்படுத்திப் புறப்படச் சித்தமானபோது, அந்த வேடன் அவர்களுக்கு ஒரு கைத்துப்பாக்கியும் ஒரு வேட்டை நாயுங் கொடுத்து அவர்களுக்கு வேண்டுமளவு பொன்கட்டிகளும் எடுத்துக்கொண்டுபோம்படிச்சொல்லி, பின்பு கொஞ்சம் தூரம் வழிகொண்டுவிட்டு, அவர்கள் கையில் ஒரு கத்தியைக் கொடுத்து, நீங்கள் இருவரும் பிரிந்துபோகவேண்டியிருந்தால், அப்போது இருவருமாய் இதைப் பாதையோரமாய் ஒரு மரத்தில் சொருகிவைத்துப்போங்கள்; உங்களுள் எவனாவது ஒருவன் சீக்கிரமே திரும்பிவந்தால், அப்போது இது மற்றொருவனுடைய செய்தி இப்படிப்பட்டதென்று தெரியக்காட்டும். போனவன் சாகாமல் பிழைத்திருக்குமளவும் அவன் பக்கமாயிருக்கிற நுனி பளபளப்பாயே இருக்கும். இறந்துபோனால் உடனே துருப்பிடித்துப்போம்; ஜாக்கிரதையாய்ப் போய்வாருங்கள் என்றுசொல்லி அனுப்பினான்.

அவ்விரண்டு சகோதரர்களும் அப்படியே அந்த வேடனிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு யாத்திரைபோனார்கள். அவர்கள் கையில் கொண்டுபோன உணவு அவர்களுக்கு முதனாளைக்கே போதும் போதாததாயிருந்தது. மறுநாள் காலையிலெழுந்து கொஞ்சம்தூரம் யாத்திரைசெய்து பின்பு புசிப்பதற்கு ஒன்றும் இல்லாமையால் ஒருவன் மற்றொருவனைப்பார்த்து, நாம் உணவுக்காக ஏதாவது ஒரு மிருகத்தை அடிக்கவேண்டும்; இல்லாவிட்டால் நாம் பசியாலிறக்கவேண்டுவதுதானென, அப்படியே சம்மதித்து நிற்கையில், தற்செயலாய் ஒரு முசல் ஓடக்கண்டு ஒருவன் அதைக் குறிபார்த்து அடிக்கப்போனான். அதைப்பார்த்து அந்த முசல், வேடர்களே, நீங்கள் என்னைமாத்திரம் உயிரோடு விடுங்கள்; எனக்குப்பதிலாக இரண்டு முசற்குட்டிகள் கொண்டுவந்து தருகிறேனென்று சொல்லிவிட்டுப் புதரண்டையோடி இரண்டு குட்டிகளைக் கொண்டுவந்தது. அந்தக் குட்டிகளின் அழகையும் விளையாட்டுத்திறத்தையுங்கண்டு அவற்றைக்கொல்ல மனம்

வராமல் கூடவே அழைத்துக்கொண்டுபோனார்கள். அங்கிருந்து புறப்பட்டுச் சிறிதுதூரம்போகையில் நரியொன்று வரக்கண்டு அதைக் கொல்லப்போக, அது ஓ வேடர்களே, என் உயிரைத் தப்புவிப்பீர்களானால், எனக்குப் பதிலாக இரண்டு நரிக்குட்டிகள் கொண்டுவந்து தருவேனென்றுசொல்லி, இரண்டு குட்டிகள் கொண்டுவந்து கொடுத்தது. அவர்கள் அவற்றையும் வதைசெய்ய மனம்வராமல் முசல்குட்டிகளோடுகூடவே அழைத்துக் கொண்டுபோனார்கள்.

கொஞ்சம் தூரத்துக்கப்பால் கோநாயொன்று வரக்கண்டார்கள். அதுவும் முன்வந்த மிருகங்களைப்போலவே சொல்லி இரண்டு குட்டிகள் கொண்டுவந்துகொடுக்க, அவற்றையும் கொல்ல அவர்களுக்குத் துணிவு உண்டாகவில்லை. அதனால் அவையும் மற்ற நான்கு மிருகங்களோடுகூடவே அவர்களைப் பின்தொடர்ந்து போயின. இப்படியே இரண்டு கரடிக்குட்டிகளும் வந்துசேர்ந்தன. பின்பு சிங்கமொன்று வந்தது. அவர்கள் சிறிதும் பயப்படாமல் அந்தச் சிங்கத்தையும் அடிக்கப்போக, அதுவும் மற்ற மிருகங்களைப்போலவே அவர்களை வேண்டிக்கொண்டு இரண்டு சிங்கக்குட்டிகளைக் கொண்டுவந்துகொடுத்தது. இவ்விதமாக அந்த வேடச்சிறுவர்களுக்கு இரண்டு சிங்கமும், இரண்டு கரடியும், இரண்டு கோநாயும், இரண்டு குள்ளநரியும், இரண்டு முசலும் துணையாகச் சேர்ந்தன. ஆயினும் அவர்களுடைய பசியைத் தணிக்க ஒன்றும் அகப்படவில்லை. அதனால் அவர்கள் நரியைப்பார்த்து, நரிகளே, நீங்கள் சுறுசுறுப்பும் வேகமாயோடுந்திறமையும் உடையவர்களாதலால் எங்களுக்கு உணவுக்காக ஏதாவது தேடிக்கொண்டுவாருங்கள் என்றுசொல்ல நரி, இதோ அருகாமையில் குப்பமொன்று இருக்கிறது; அங்கேபோனால் ஆடோ கோழியோ வேண்டியது அகப்படும்; போவோம் வாருங்கள் என்று அழைத்துக்கொண்டுபோயிற்று.

அந்தக் குப்பத்திற்குப்போய் அவர்கள் தங்களுக்கும் தங்களுடைய மிருகங்களுக்கும் வேண்டிய உணவுகள் வாங்கிக்கொண்டு அப்புறம் புறப்பட்டுப்போனார்கள். அவ்விடங்களில் நன்ருய் வழக்கப்பட்டதாகையால் நரி அவர்களை வழிகாட்டி அழைத்துக்கொண்டுபோயிற்று. அப்படியே சிலநாள் யாத்திரைசெய்தார்கள்; அவ்விடங்களில் அந்தச் சகோதரர்கள் இருவரும்கூடி வேலைசெய்து வாழும்படியான தொழில் ஒன்றும் அகப்படவில்லை. அதனால் இருவரும் பிரிந்து இரண்டு வழியாகச் சென்று போய்ப் பொருள் தேடிக்கொண்டுவந்து அவ்விடத்தில் ஒன்ருய்க் கூடுகிறதென்று ஏற்பாடுசெய்துகொண்டு, அந்த மிருகங்களையெல்லாம் பேருக்கு ஒவ்வொன்ருகப் பங்கிட்டுக்கொண்டு, காட்டிலே கற்பித்தவேடன் கொடுத்த கத்தியை ஒரு மரத்திலே கிழக்கு மேற்காக

நாட்டிவிட்டுத் தாங்கள் சாகுமளவும் தங்களுடைய நேசம் மாறக் கூடாதென்று பிரமாணஞ் செய்துகொண்டு பிரிந்துபோனார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு இளையவன் தன் ஐந்து மிருகங்களை யும் கூட்டிக்கொண்டு தன் வழியேபோகையில், கொஞ்சதூரத் துக்கு அப்பால் பட்டணமொன்று இருக்கக்கண்டான். அந்தப் பட்டணம் முழுதும் துக்கசமுத்திரத்தில் அமிழ்ந்துகிடந்தது. அந்தப் பட்டணத்தில் அவன் ஒரு சத்திரந்தேடி அங்கே தன் மிரு கங்களையெல்லாம் ஒரு கொட்டாரத்தில் விட்டுவிட்டுத் தான் சத்தி ரத்தில் இறங்கினான். முசலும் நரியும் சிறிய மிருகமாகையால் அந்தக் கொட்டாரச்சுவரிலிருந்த ஒரு சிறிய ரந்திரத்தின்வழி யாய்ச் சத்திரத்திற்குள்ளேபோய்த் தங்களுக்கு வேண்டிய இரை தேடிக்கொண்டுவந்தன. கரடி கோநாய் முதலியவை உருவம் பருத்தவையாதலால் அந்தச் சந்தின்வழியாய் உள்ளே போக மாட்டாமல் பட்டினியாய்த் தவிப்பதுகண்டு அந்த வேடன் ஒரு ஆடுவாங்கி அவைகளுக்குப் போட்டு அவற்றை ஆதரித்துவிட்டுத் தானும் பசிதணியத் தின்றான்.

பின்பு அவர்களெல்லாரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கை யில் வேடன் சத்திரக்காரனைப்பார்த்து, ஐயா, இப்பட்டணத் தில் ஒருவர்க்காவது சிறிதளவுகூடச் சந்தோஷமிருப்பதாய்த் தென்படவில்லையே; இப்படி யாவரும் ஒருமிக்கத் துக்கப்படுவதற் குக் காரணம் என்னவென்று கேட்டான். அதற்கு அவன் அந் தத் துக்கத்தை ஏன் கேட்கிறாய்! இப்பட்டணத்து ராஜாவுக்கு ஒரே ஒரு மகள்; அந்த ஒரு பெண்ணும் நாளையதினம் இறந்து போம்படி நேரிட்டிருக்கிறது என, வேடன், என்ன! அவளுக்கு அப்படிப்பட்டநோய் வந்திருக்கிறதாவென்று கேட்டதற்கு, அவன் நோயொன்றுமில்லை, ஆயினும் அவள் சாகும்படியான விதி நேரிட் டிருக்கிறதென்று சொல்ல, வேடன் அது என்ன அதிசயம் ஐயா என்றான்.

அதற்குச் சத்திரக்காரன், இப்பட்டணத்துக்கு வெளியே மலை யொன்றிருக்கிறது. அம்மலையில் ஏழுதலையுள்ள நாகாசுரனொ ருவன் இருக்கிறான். அவனுக்கு ஒவ்வொரு வருஷமும் நல்ல வயதான பெண்பிள்ளை ஒருத்தியை இரையாகக் கொண்டுபோ ய்க் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் தேசமெல் லாம் அழித்துப்போடுவான். அவனுக்குக் கொடுத்தே இப்பட் டணத்துப் பெண்களெல்லாம் ஒழிந்துபோனார்கள். ராஜாவின் மகள் ஒருத்திதான் மிகுதி; அவளுக்கும் நாளையதினம் நாள்வந்துவிட் டது; இதினின்றும் தப்பித்துக்கொள்ள வழி வேறொன்றும் இல் லையேயென்று யாவரும் துக்கிக்கிறார்களென்றான். அதைக்கேட்டு வேடன், ஆனால் அவனை இத்தனைநாள்வரையில் கொல்லாமலிரு ப்பதேனெனச் சத்திரக்காரன், அந்தத் துக்கத்தையும் நான் வாய்

விட்டுச் சொல்லவேண்டுமா? அவனைக் கொல்லப்போய் ஆயிரம் பதினாயிரமாய் நல்ல நல்ல வீரர்களெல்லாம் உயிரிழந்துபோனார்கள். அது தெரிந்து எங்கள் அரசன் அந்த அசுரனைக் கொல்கிறவனுக்குத் தன் மகளைக் கலியாணஞ்செய்துகொடுப்பதுமன்றியில், தன் காலத்திற்குப்பிறகு அவனுக்கே தன் தேசத்தில் பட்டம் சூட்டிவைப்பதாகவும் பிரசித்தஞ்செய்திருக்கிறார் என்றான்.

அதைக்கேட்டு வேடன், அதற்கு யாதொருபதிலும் சொல்லாமலிருந்து மறுநாள் காலையிலெழுந்து தன் மிருகங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு அந்த அசுரன் இருக்கிற மலைமேல் ஏறிச்சென்றான். கொஞ்சதூரம்போகையில் கோயிலொன்றிருந்தது. அந்தக் கோயிலின் பலிபீடத்தண்டை மூன்று அமிர்தகலசங்கள் வைத்திருந்ததுமன்றி, அதனருகே இந்த அமுதத்தைக் குடிப்பவனுக்குத் தேகத்தில் சிறந்த வலிமையுண்டாகுமென்றும், இந்தத் தரையின்கீழ் புதைத்திருக்கிற கத்தியை அவன் எடுத்துக்கொண்டு கையாளலாமென்றும் எழுதப்பட்டிருந்தது. இந்த வேடன் போய் அந்த அமுதத்தைக் குடியாமலே கத்தியைத்தேடிக் கண்டுபிடித்தான். ஆனால் அது அவனால் அசைக்கக்கூடவில்லை. உடனே போய் அந்த அமுதத்தைக் குடித்துவிட்டுவந்து கத்தியை எடுத்தான். அப்போது அது அவனுக்கு ஒரு இறகைத் தூக்குவதுபோல் இருந்ததேயொழியச் சிறிதுவருத்தமும் தோன்றவில்லை.

நாகாசுரனுக்குக் கன்னிகையைக் கொடுக்கும்படியான வேளை வந்ததும், அரசன் முதலிய யாவரும் அந்த ராஜகன்னிகையை அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் வெகுதூரத்திலிருந்தே மலைமேல் இந்த வேடனைக்கண்டு இவனே தங்களுக்காக வந்து காத்திருக்கிற நாகாசுரனென்றெண்ணி, மலைமேல் ஏறிப்போவதற்கு அஞ்சி அங்கேயே நின்றார்கள். நமக்காக இப்பட்டணம் முழுதும் நாசமாவானேனென்று அந்தப் பெண்மாத்திரம் தனியே மலைமேல் ஏறிச்சென்றாள். அரசன் முதலியவர்களெல்லாரும் கண்ணும் கண்ணீருமாய் அழுதுகொண்டே வீடுபோய்ச்சேர்ந்தார்கள். ஆயினும் ராணிமட்டும் மகளை விட்டுப்போகக் காலெழாமல், ஒதுக்குப்புறமாய் ஓரிடத்திலே போய் நின்று என்னநடக்கிறதோ பார்ப்போமென்றிருந்தாள்.

அந்த அரசனுடைய மகள் மலைமேலேறிப் போய்ப் பார்த்தபோது, அவன் அந்த அசுரன் அன்று; ஒரு சிறுவேடன் என்று நன்றாய்த் தெரிந்தது. அவன் அந்தப் பெண்ணைப்பார்த்து, என் கண்ணே பயப்படாதே; நான் உன்னைக் காப்பாற்றுகிறேனென்று சொல்லி அவளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே ஓர் அறையில்விட்டுப் பூட்டினான். (இன்னும் வரும்.)

சமாசாரம்.

பர்ம்மாதேசத்துச் சண்டை.—பர்மாவிலுண்டான குழப்பம் அப்படியே இருக்கிறது. இருதிறத்தாரும் சண்டைக்குவேண்டிய சந்நாகங்கள் செய்துவருகிறார்கள். மாண்டலே நகரத்திலும் கரையோரங்களிலும் பர்மாதேசத்தரசன் அநேகம் ஆயிரம் சேனைகளைச் சேர்த்துவைத்திருக்கிறானென்றும், சீனதேசத்தார் அவனுக்குச் சேனைகொடுத்து உதவிசெய்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்களென்றும், அங்கிலேயருடைய சேனைகள் ஐராவதியென்கிற நதியின் வழியாய் எதிர்த்துச்செல்லாதபடி மேல்பர்மாதேசத்தில் ஐராவதி நதிக்கரையிலுள்ள மின்லாவென்னும் கோட்டையைப் பலப்படுத்துகிறார்களென்றும் இப்படிப் பலவிதமான வதந்திகளுண்டாயிருக்கின்றன. பூராயமாய் விசாரித்துப்பார்த்ததில் அப்படிப்பட்ட செய்தியொன்றுமில்லை என்கிறார்கள். இப்போது அங்கே யுத்தத்தின் கொடுமையைப்பார்க்கிலும் வெயிலின் கொடுமை மிகவும் அதிகமாகி ஜனங்களை அநேகமாய் அழித்துவிடுமென்று தோன்றுகிறது.

ஆப்கனிஸ்தானம்.—இவ்விடத்துச் சண்டையும் இன்னும் ஒருவிதத்திலும் முடிவுபெறாமலேயிருக்கிறது. சில ஜாதியார் இந்தியாவின் படைகளை எதிர்க்கிறார்கள்; சிலர் துணையாகக்கொள்கிறார்கள். உயிர்ச்சேதம்மட்டும் இருபக்கத்திலும் உண்டாகிறது. இந்தியதுரைத்தனத்தார் போடுகிற தந்திதபால் கம்பிகளை அத்தேசத்தார் அறுத்துக்கொண்டே வருகிறார்கள். ஆலிமஸ்ஜித் ஜம்ரூத் என்னும் கோட்டைகளண்டை கைபர் கணவாயை நன்றாய் அடைத்துவிடும்படியாக முயற்சிநடக்கின்றதாம்; ஆனால் இது சாத்தியப்படாதகாரியம். சீக்கிரத்தில் யாகூப்கான் ஒருவழிக்கு வந்துவிடுவானென்று தோன்றுகிறது.

ஜூலுலாந்து.—இந்நாட்டுச் சண்டையும் அப்படியே இருக்கிறது. முதலில் பெரும்போராடி ஆயிரக்கணக்காய் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அடைந்தபின் அங்கிலேயர் ஈகோ என்னும் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டார்களென்றாலும் அது மறுபடியும் அத்தேசத்தாருக்குக் கைவசமாய்விட்டது. அங்கே பகைவரொருவரும் அண்டவொட்டாமல் அநேகம் சேனைசள் காவல்காத்துக்கொண்டிருக்கின்றன. அதை மறுபடியும் கைப்பற்றுகிறதற்காக அங்கிலேயரும் பலமானமுயற்சி செய்துவருகிறார்கள்.

பஞ்சம்.—இப்போது காசிமுதலான இடங்களில் பஞ்சம் நேரிட்டிருக்கிறதாம். முன் நாம் அனுபவித்த க்ஷாமம் இதில் பத்தில் ஒருபங்குகூட இராதென்கிறார்கள். அங்கே ரூபாய்க்கு மூன்றுபடி அரிசிகூட அகப்படவில்லையாம்.

Printed at the S. P. C. K. Press, 1879.

BELL'S TELEPHONE IN OPERATION.

பெல் என்பவர் இயற்றிய ஒலிகாட்டிக்கருவி.